பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 தை 14 செவ்வாய்க்கிழமை (28-01-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:63

# பொ.ஐ.மு. - ஜே.வி.பி. கூட்டணியை ஏற்படுத்துவதில் மீண்டும் குழப்பங்கள்

## இடதுசாரிக் கட்சிகளின் அதிருப்தியால் இந்நிலை

கொழும்பு,ஜனவரி28

**பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் கூட்டணி ஒன்றை ஏற்படுத்துவதில் மீண்டும் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. இதனை அடுத்து கூட்டணியை ஏற்படுத்துவது தொடர்பான இறுதி முடிவை எடுப்பது பிற்போடப்பட்டுள்ளது.**

கூட்டணியை ஏற்படுத்தும் விடயத்தில் ஜனாதிபதியும் ஜே.வி.பி. தலைவர்களும் மட்டுமே ஈடுபட்டு வருகின்றனர். சுதந்திரக் கட்சியின் தலைவி என்ற வகையிலேயே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தப் பேச்சுக்களில் பங்குபற்றி வருகின்றார். பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இருந்து எந்த ஒருவரும் இந்தப் பேச்சில் கலந்துகொள்ளவில்லை.

இதனால், பொ.ஐ.முன்னணியில் உள்ள ஏனைய கட்சிகள் அதிருப்தி கொண்டுள்ளன. இது சு.கட்சிக்கும்

(14ஆம் பக்கம் பார்க்க)

## சமஷ்டி ஆட்சி முறை குறித்து இன்று பொ.ஐ.மு. எம்.பிக்களுக்கு விளக்கம்

கொழும்பு,ஜன.28

உத்தேச சமஷ்டி ஆட்சிமுறை குறித்து பொ.ஐ.முன்னணி எம்.பிக்களுக்கு விளக்கமளிக்கப்படும். இது தொடர்பான முதலாவது கூட்டம் இன்று நடைபெறும்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களில் சமஷ்டி ஆட்சிமுறை யோசனை முன்வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

இதனால், உண்மையான சமஷ்டி ஆட்சிமுறை என்பது என்னவென்பதை பொ.ஐ.முன்னணி எம்.பிக்களுக்கு விளக்கிக்கூறுவதென ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்திருக்கிறார்.

ஜனாதிபதியின் இத்தீர்மானத்தை அடுத்து முதலாவது விளக்கக் கூட்டம் இன்று ஜனாதிபதி மாளிகையில் நடத்தப்படுகிறது. பேராசிரியர் விஸ்வ வர்ணபால, சமஷ்டி ஆட்சிமுறை குறித்து விளக்கமளிப்பார்.

இதற்கிடையில் சமஷ்டி ஆட்சி முறை குறித்து ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அறிந்து வந்திருக்கும் பொ.ஐ. மு. நாடாளுமன்ற உறுப்பினர்களான சரத் அமுனுகம, ஜோன் செனவிரத்ன, நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் அறிக்கை ஒன்றைத் தயாரித்திருக்கின்றனர்.

அந்த அறிக்கை எதிர்வரும் 3ஆம் திகதி நடைபெறும் பொ.ஐ. முன்னணியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. (ம)

## கண்காணிப்புக் குழுத் தலைவர் யாழ். விஜயம் பாதுகாப்பு வலயப்பிரச்சினை பற்றி ஆராய்வு

### இன்று வன்னியில் தமிழ்ச்செல்வனைச் சந்திப்பார்

யாழ்ப்பாணம்,ஜன.28

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன்ட் புருஹோவ்டே வடக்கு - கிழக்கில் மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். நேற்றுக்காலை அவர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த அவர், இன்று யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னி சென்று பின்னர் மட்டக்களப்புக்குச் செல்வார்.

யாழ்ப்பாணம் வந்த கண்காணிப்புக் குழுத் தலைவர் கொழும்புத்துறை, பாஷையூர், நாவாந்துறை, குருநகர் மற்றும் முஸ்லிம் பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டார். உயர் பாதுகாப்பு வலயம், மீனவர்கள், பொது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் அவர் ஆராய்ந்தார்.

தாங்கள் பிடிக்கும் பெருந்தொகையான மீன்களை ஐஸ்வசதி இல்லாததால் வீணே கொட்ட வேண்டியிருப்பதாகவும், அரசு தேவையான வசதிகளைச் செய்து தரவில்லையெனவும் மனவர்கள் அவரிடம் முறையிட்டனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## காவலில் உள்ள 6 புலிகளின் பிணை மனுக்கள் ஒத்திவைப்பு

கொழும்பு,ஜன.28

திருகோணமலை மூதூர் கடலில் படகொன்றில் கிளைமோர் கண்ணிவெடிகளை எடுத்துச் சென்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த நவம்பர் மாதம் முதல் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் அறுவரின் பிணை மனுக்கள் எதிர்வரும் 18ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

கடந்த வியாழக்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் ராஜா பெர்னாண்டோ, எதிரிசூரிய ஆகியோர் முன்னிலையில் இவ்வழக்குகள் எடுத்துக்கொள்ளப்பட்டபோது சட்டமா அதிபர் தரப்பில் ஆஜரான அரச சட்டத்தரணி ஆட்சேபனை தாக்கல் செய்ய அவகாசம் தருமாறு கோரினார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## அவசர அபிவிருத்தி வேலைகளுக்கு அரசு உடனடியாக உதவவேண்டும்

### குடாநாட்டுக்கு வருகை தந்த புருஹோவ்டே தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.28

யாழ்.குடாநாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தில் குறிப்பிடத்தக்க அளவு மாற்றமும் அபிவிருத்தியும் ஏற்பட்டு வருகின்றது. எனினும் மேலும் பல அவசர அபிவிருத்தி வேலைகளை குடாநாட்டில் மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. அதற்கான உதவிகளை அரசாங்கம் உடனடியாக வழங்க வேண்டும்.

- நேற்று யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்து குடாநாட்டு நிலைமைகளை நேரில் அவதானித்த பின்னர் ஜி.ரி.இசற் பங்களாவில் செய்தியாளர்களைச் சந்தித்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரொன்ட் புருஹோவ்டே இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் கருத்துத் தெரிவித்ததாவது:-

யாழ்.குடாநாட்டின் தற்போதைய நிலைமைகளை நேரில் கண்டறிவதற்காகவே நான் இங்கு வந்துள்ளேன். இங்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தில் குறிப்பிடத்தக்க அளவு மாற்றமும் அபிவிருத்தியும் ஏற்பட்டுள்ளது. எனினும் யுத்தத்தினால் ஏற்பட்ட வடுக்கள் இன்னும் மாறவில்லை. விரைவில் அவையும் மாறவேண்டும்.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதானப் பேச்சுக்கள் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளன. விரைவில் சமாதான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படும். அதன்மூலம்தான் நிரந்தர

(14ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல்

வடமராட்சி,ஜன.28

பாக்குநீரிணைக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற நான்கு மீனவர்கள் கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் காயமடைந்த மீனவர்கள் நால்வரும் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வெங்கடாசலம் அருணாச்செல்வன், குணம் சந்திரகுமார், ஜோசப் பிரேமதாஸ், சின்னத்துரை ராஜேந்திரன் ஆகிய நால்வருமே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர்.

இந்த நான்கு மீனவர்களும் கடந்த 25ஆம் திகதி சனிக்கிழமை

(14ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சித் தலைவர் கிழக்கு விஜயம்

கொழும்பு,ஜன.28

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ கிழக்கு மாகாணத்துக்கும் விஜயம் செய்யவிருக்கின்றார் என அறியப்படுகிறது.

கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களின் அழைப்பின் பேரிலேயே அவர் அங்கு விஜயம் செய்யவிருக்கிறார். போர்நிறுத்தத்தின் பின்னர் கிழக்கில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் பொதுமக்கள் எதிர்நோக்

(14ஆம் பக்கம் பார்க்க)

### கொக்கட்டிச்சோலை படுகொலைகளில்

## உயிரிழந்த 142 பொதுமக்கள் நினைவாகத் தூபி இன்று திறப்பு

மட்டக்களப்பு,ஜன.28

கொக்கட்டிச்சோலையில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் ஞாபகார்த்த தூபியொன்று இன்று மகிழடித்தீவுச் சந்தியில் திறந்துவைக்கப்படும்.

1987ஆம் ஆண்டு ஜனவரி 28ஆம் திகதி கொக்கட்டிச்சோலை இறால் பண்ணையில் 85 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். 1997 ஆம் ஆண்டு மகிழடித்தீவுச்சந்தியில் 57 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தப் படுகொலைகளில் உயிரிழந்த 142 பொதுமக்களின் பெயர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## இயக்கத்துக்கு சிறுவர்கள் சேர்ப்பாம் சீறுகின்றார் ஜனாதிபதி குமாரதுங்க!



கொழும்பு,ஜன.28

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் இராணுவத்தினரும் பொலிஸாரும் தீவிரமாக ஈடுபடுவதன் மூலம் மக்கள், கடத்தப்படலாம் என்ற அச்சமின்றி நடமாட்ச் சுதந்திரத்தை அனுபவிப்பதை உறுதிப்படுத்தவேண்டும்.

இராணுவத் தளபதி லெப்ரினண்ட் ஜெனரல் லயனல் பலகல்ல மற்றும் பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா ஆகியோருக்கு தனித்தனியாக எழுதிய கடிதங்களில் ஜனாதிபதி குமாரதுங்க இவ்வாறு வலியுறுத்தியிருக்கின்றார்.

புலிகளின் ஆள்கடத்தல்கள் குறித்து - குறிப்பாக சிறுவர்கள் கடத்தப்படுவது குறித்து - கடந்த சில மாதங்களாக எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருப்பது எனக்கு கவலை அளித்துள்ளது - என்று இக் கடிதங்களில் தெரிவித்துள்ள ஜனாதிபதி, இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கும்படியும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஒரு வாரகாலத்துக்குள் அறிவிக்கும்படியும் கேட்டுள்ளார். (ம)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# 'ஏ-9' நெடுஞ்சாலையில் புதிதாக இராணுவ முகாம்

## ஏழு குடும்பங்கள் படையினரால் வெளியேற்றம்

கைதடிக்கும் சாவகச்சேரி வரை வா் கோயிலடிக்கும் இடையிலான முக்கிய நெடுஞ்சாலைப் பகுதியில் இராணுவ முகாம் ஒன்று புதிதாக அமைக்கப்படுகிறது. அதற்காக அங்கிருந்த ஏழு குடும்பங்கள் படையினரால் வெளியேற்றப்படுகின்றன. 4 குடும்பங்கள் ஏற்கனவே வெளியேறிவிட்டன.

புதிதாக இராணுவ முகாம் அமைக்கப்படும் பகுதி நெருக்கமாக மக்கள் வாழும் பகுதி அல்ல. என்றாலும், யாழ்.குடாநாட்டு மக்களுக்கு இதுபற்றி அச்சம் கலந்த பல சந்தேகங்கள் எழுந்துள்ளன.

இங்கே முகாம் அமைக்கப்படுவது போல் காலக்கிரமத்தில் வேறு இடங்களிலும், மக்கள் பெரும் எண்ணிக்கையில் வாழும் பகுதிகளிலும் இராணுவ முகாம்கள் அமைக்கப்படுமா என்ற சந்தேகம்தான் மக்களை வாட்டுகிறது.

யாழ்.குடாநாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களில் பொது மக்களின் வீடுகளை ஆக்கிரமித்து வைத்திருக்கும் படையினர், அந்த வீடுகளிலிருந்து வெளியேறவேண்டும்; மக்கள் தங்கள் சொந்த வீடுகளுக்குச் சென்று மீள்குடியமர வழிவிடவேண்டும் என்று விடுதலைப் புலிகள் அரசிடம் வலியுறுத்தி வருகின்றனர். சமாதானப் பேச்சுக்களில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய விடயம் இது.

பாதுகாப்பு வலயத்தில் நிலைகொண்டுள்ள படையினரை வேறு இடங்களுக்குக் கொண்டு செல்வது பாதுகாப்புக்கு உகந்ததா என்று வெளிநாடுகளிடம், குறிப்பாக இந்திய இராணுவத்தின் முன்னாள் அதிகாரியான சதீஷ் நம்பியாரிடம் ஆலோசனையும் அறிக்கையும் கேட்டிருக்கிறது அரசு. அறிக்கை வெளிவரும்வரை அரசின் வேண்டுகோளுக்கு இணங்கிப் புலிகள் காத்திருக்கிறார்கள்.

மக்களை அவர்களின் சொந்த வீடுகளில் மீள்குடியமரச் செய்வதற்காக உயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்தே படையினரை வெளியேற்றுவதற்குப் புலிகள் பேச்சு நடத்தி வரும் வேளையில், வேறு பகுதியில் இராணுவ முகாம்களை அமைப்பதற்காக மக்கள் தற்போது சொந்தக் குடியிருப்புகளிலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள்.

கைதடி - சாவகச்சேரி நெடுஞ்சாலைப் பகுதியில் இராணுவ முகாம் அமைப்பதற்காக வெளியேற்றப்படுபவர்கள் ஏழு குடும்பத்தினர் மட்டுமே.

வேறு இடங்களிலும் இப்படி புதிது புதிதாக முகாம்களை அமைக்கத் தொடங்கினால் இன்னும் எத்தனை குடும்பங்கள் வெளியேறி அகதிகளாக நேருமோ என்ற அச்சம் நிலவுகிறது. (ம)

## நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம்,ஜன.28

தேசிய கலை இலக்கியப் பேரவையின் நூறாவது நூலான 'சுந்தன் கருணை' நாடக நூல் அறிமுக விழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கவிஞர் கலாநிதி இ.முருகையன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சட்டத்தரணி சோ.தேவராஜா மற்றும் க.தணிகாசலம் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

ஆசிரியரை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர் ந.சிவகடாட்சமும் அறிமுக உரையை ஆசிரியர் சிவநேசராசாவும் நிகழ்த்துவர். (எ-4)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

கொக்குவில்,ஜன.28

உடுவில்/நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கான பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று காலை 10மணிக்கு உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சகல திணைக்களங்களையும் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொள்வர். (எ-76)

## வரணி வீட்டுத் திட்டப் பகுதியில் படையினர் புதிய முகாம் அமைப்பு

வரணி,ஜன.28

வரணி பத்து வீட்டுத் திட்டப் பகுதியில், வரணி மருத்துவமனைக்கு முன்பாக புதிதாக இராணுவ முகாம் ஒன்றை அமைக்கும் பணியில் படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

தனிநபர்களுக்கு சொந்தமான காணிகள் பலவற்றை இணைத்து புல்டோசர் மூலம் சுற்றிவர பாரிய மண் அணைகள் அமைக்கப்படுகின்றன. அத்துடன் பாரிய அளவில் பங்கர்களும் வெட்டப்படுவதை அவதானிக்க முடிகின்றது எனக் கூறப்பட்டது.

மேற்படி முகாம் அமைக்கப்படும் பிரதேசத்தில் படையினர் இதுவரை காலமும் பயன்படுத்தி வந்த விளையாட்டு மைதானமும் அடங்கியுள்ளது.

மேற்படி பத்து வீட்டுத் திட்டம் முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸவின் கிராம எழுச்சித் திட்டத்தின்கீழ் நிறுவப்பட்டது. பின்னர் யுத்த சூழலால் மக்கள் இடம்பெயர்ந்து சென்றதை அடுத்து குறித்த வீடுகள் உடைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். (எ-170)

## மீள்குடியமர்வு குறித்த கூட்டம்

அரியாலை கிழக்கு ஜே/90 கிராம அலுவலர் பிரிவில் மீள்குடியமர்வு தொடர்பான கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பூம்புகார் அரியாலை கிழக்கு த.க. பாடசாலையில் (தபாற்கட்டை சந்தி அரியாலை) நடைபெறவுள்ளது.

நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு, முனங்கு பகுதி மக்களை இந்தக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## தோட்டத் தொழிலாளர்களுக்கு 5,000 வீடுகள்; பென்சன் திட்டம்!

கொழும்பு,ஜன.28

இவ்வருட இறுதிக்குள் தோட்டத் தொழிலாளர்களுக்கான 5,000 வீடுகள் அமைக்கப்படும். வீடமைப்பு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் வீடமைப்புத் திட்டத்திற்கு மேலதிகமாக பெருந்தோட்ட கைத்தொழில அபிவிருத்தி அமைச்சின் மூலம் இவ வீடுகள் கட்டப்படும்.

பெருந்தோட்ட கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எனது அமைச்சு தோட்டங்களை அபிவிருத்தி செய்வதைமட்டும்தான் செய்கிறது என்று கருதிவிடக்கூடாது. தோட்டத்தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதிலும் நாம் அக்கறை கொண்டிருக்கின்றோம்.

தோட்டத் தொழிலாளர் நலன்புரி நிதியம் மற்றும் வெளிநாட்டு உதவிகள் மூலம் தோட்டத்தொழிலாளர்களின் குடியிருப்பு, சுகாதாரம், கல்வி மற்றும் பொது வசதிகள் போன்ற திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். மேலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு பென்சன் வழங்கும் திட்டம் ஒன்றும் இப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்துக்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்ததும் அரச ஊழியர்கள் போன்று தோட்டத் தொழிலாளர்களும் பென்சன் பெறுவார்கள்.

- இவ்வாறு அவர் கூறினார். (ம)

## மட்டு.தொழில்நுட்பக் கல்லூரி எதிரே மாணவர் பகிஷ்கரிப்பு, ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, மஞ்சந்தொடுவாய் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களும் உயர் தேசிய கல்வி நிறுவன மாணவர்களும் இணைந்து நேற்று தொழில்நுட்பக் கல்லூரிக்கு எதிரே பகிஷ்கரிப்பிலும் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரியினால் மேற்கொள்ளப்படும் சிவில் தொழில்நுட்ப நெறியை தனிக் கட்டடத்தில் நடத்த வேண்டும் எனக் கோரியும், தொழில்நுட்பக் கல்லூரியில் உள்ள குறைபாடுகளை தீர்க்கக் கோரியுமே மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து, மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.கிருஷ்ணபிள்ளை, புலிகளின் கிழக்கு புனர்வாழ்வு கழகப் பொறுப்பாளர் ராஜன் சத்தியமூர்த்தி ஆகியோர் அங்கு விஜயம் செய்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணபிள்ளை மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சர் கபீர் ஹாசிமுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டபோது எதிர்வரும் ஒன்பதாம் திகதி மட்டக்களப்புக்கு விஜயம் செய்வதாகவும் அங்கு மாணவர் ஒன்றியத்துடன் பேசி குறைகளைத் தீர்த்துவைப்பதாகவும் அமைச்சர் கபீர் ஹாசிம் உறுதியளித்தார்.

தொழில்நுட்பக் கல்லூரி, சிவில் நிறுவன பணிப்பாளர்களுடன் கிருஷ்ணபிள்ளை பேச்சு நடத்திய போது தொழில்நுட்பக் கல்லூரிக்கு 3,000 புதிய கதிரைகளை வழங்க கல்லூரி பணிப்பாளரும் புதிய கட்டடம் ஒன்றைப் பெற்றுத் தரவும் அதற்கு வாடகை செலுத்தவும் சிவில் நிறுவனத்தினரும் இணக்கம் தெரிவித்தனர். (ம)

## பழமரச் செய்கையை ஊக்குவிக்க மானியம் வழங்கும் திட்டம்

சண்டிலிப்பாய்,ஜன.28

யாழ்.மாவட்டத்திலுள்ள கமநல கேந்திர நிலைய பிரிவுகளில் பழமரச் செய்கைக்கான மானியத்திட்டமொன்று விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

பழமரச் செய்கையை ஊக்குவிக்கு முகமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தின்கீழ் எலுமிச்சை, மா, பலா ஆகிய கன்றுகள் செய்கையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன என யாழ். விவசாய திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை - வாழைச் செய்கையை ஊக்குவிப்பதற்காக நூறு வாழைக் குட்டிகளை நடுபவர்களுக்கு ஒவ்வொரு வாழைக்குட்டிக்கும் 20 ரூபா என்ற அடிப்படையில் மானிய உதவி வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

## நாடுமுழுவதும் டெங்கு ஒழிப்பு சுகாதாரப்பிரிவு விசேட திட்டம்

நாடுமுழுவதிலும் டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்கு விசேட திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என சுகாதாரசேவைகள் பணிப்பாளர் டாக்டர் அதுல வியனகே தெரிவித்திருக்கிறார்.

சுகாதார அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார். பிரதேச சுகாதார அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:-

டெங்கு நோய் பரவுவது தற்பொழுது குறைந்து வருகின்றது. சில மாவட்டங்களில் மாத்திரம் டெங்கு நோய் கூடுதலாகக் காணப்படுகிறது. புத்தளம் போன்ற மாவட்டங்களில் டெங்கு அதிகரித்தமைக்கு சுகாதாரச் சேவைகளின் உள்ள குறைபாடுகள் காரணமல்ல. பிரதேச மாநகரசபைகள் குப்பை அகற்றுதல் போன்றவற்றை சரியாக மேற்கொள்ளாமையே இதற்கான காரணமாகும்.

டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்கு நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங்களுக்கு மேலதிகமாக இந்த விசேட திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இதற்கு மக்களின் ஒத்துழைப்பு மிக முக்கியமாகும்" - என்றார். (ம)

## இளவாலைப் பாடசாலையின் நிலை குறித்து பெற்றோர்கள் கவலை!

யாழ்ப்பாணம்,ஜன.28

இடிந்து விழும் நிலையில் உள்ள வகுப்பறைகளுக்குள் இருந்து கல்வி பயிலும் நிலை இளவாலை றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலை மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ளதாக மாணவர்களின் பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பாடசாலைக் கட்டடத்தில் நீண்டகாலமாக எவ்வித சீரமைப்புக ளும் மேற்கொள்ளப்படாததாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தரம் 1முதல் தரம் 5வரை உள்ள இப்பாடசாலை 1992ஆம் ஆண்டு இடம்பெயர்வுக்குப் பின் 1996இல் மீள ஆரம்பிக்கப்பட்டது. அப்போதிலிருந்து இதுவரை கட்டட சீரமைப்புப் பணி பெரிய அளவில் இடம்பெற்றதாகத் தெரியவில்லை என்றும் பெற்றோர்கள் தெரிவித்தனர்.

இப்பாடசாலையில் உள்ள ஒரு கட்டடத்தின் நிலம் பிளந்த நிலையில் வகுப்பறைகளுக்குள் பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளன. பக்கச் சுவர்களும் அரிக்கப்பட்ட நிலையில் உள்ளன. இதனால் மாணவர்கள் வகுப்பறைக்குள் இருந்து கல்வி பயில அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட தரப்பினர் இப்பாடசாலை மாணவர்களின் கல்விநிலையைக் கருத்திற் கொண்டு உடனடியாக சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் பெற்றோர் கோரியுள்ளனர். (ஒ-8)

## ஈராக் போர் மூண்டால் இலங்கை முகங்கொடுக்க 'அவசரத் திட்டம்'

கொழும்பு,ஜன.28

அமெரிக்கா - ஈராக் போர் மூண்டால் அதற்கு முகம் கொடுப்பதற்கான 'அவசரத் திட்டம்' ஒன்றை வகுப்பதில் அரசின் பொருளாதாரக்குழு ஈடுபட்டிருக்கின்றது.

எரிபொருள், உணவுப்பொருள் உட்பட அத்தியாவசியப் பொருள்களை மேலதிகமாகக் கையிருப்பில் வைத்திருப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருக்கின்றது.

அதை அடுத்தே 'அவசரத் திட்டம்' ஒன்று தீட்டப்பட்டு வருகின்றது.

கடந்தவாரம் கூடிய அரசாங்கப் பொருளாதாரக்குழு, போர் மூண்டால் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் பெருமளவு உயரலாம் என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறது.

அவ்வாறான ஒரு நிலையில் உள்நாட்டில் பொருள்களின் விலைகள் அதிகரிப்பதைத் தடுத்து மக்களுக்கு உதவுவதற்காக பொருள்களை மேலதிகமாகக் கையிருப்பில் வைத்திருக்க வேண்டுமென அக்குழு தீர்மானித்திருக்கிறது. (ம)

## அனுமதியின்றி மதுபானம் எடுத்துச்சென்றவர் சிக்கினார்!

யாழ்ப்பாணம்,ஜன.28

அனுமதிப்பத்திரம் இன்றி மதுபான வகைகளைக் காரில் எடுத்துச் சென்ற நபர் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் மடக்கிப்பிடிக்கப்பட்டார். நேற்று அவர் யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த குமாரசுவாமி சதாநந்தன் என்பவரே ஆஜர் செய்யப்பட்டவராவார். இவரை 10 ஆயிரம் ரூபா ஆளபிணையில் செல்வதற்கு அனுமதித்த யாழ்.நீதிமன்ற பதில் நீதிவான் பா.சுப்பிரமணியம் இது தொடர்பான விசாரணையை அடுத்த மாதம் 5ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

100 போத்தல் அதிவிசேட சாராயம், 50 போத்தல் விசேடம், 120 போத்தல் பியர் ஆகிய மதுபான வகைகளே காரில் எடுத்துவரப்பட்ட வையாகும்.

சம்பவத்துடன் தொடர்புடைய காரும் மன்றினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. (ம-10)

## அபிராமிப்பட்டர் பெருவிழா

அபிராமிப்பட்டர் பெருவிழா மீசாலை மேற்கு நரசிங்க வைரவர் காளியம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் முதலாம் திகதி காலை 10 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

காலை அபிஷேகத்துடன் அபிராமிப்பட்டர் பாடிய அந்தாதி நூறு பாடல்களும் சிவத்தமிழ்மணி ஆறுமா. துரைராசா தலைமையிலான குழுவினரால் பாடப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## அத்தியாவசிய பாவனைப்பொருள் விலை உயர்வைத் தடுக்க ஏற்பாடு

கொழும்பு,ஜன.28

அத்தியாவசியப் பாவனைப் பொருள்களின் விலை உயர்வைத் தடுத்து மக்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

இது தொடர்பாக ஆராய்ந்து ஒரு வாரத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான குழுவைப் பணித்திருக்கிறார்.

அமைச்சர் கரு ஜயசூரிய தலைமையிலான வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான குழு கடந்தவாரம் கூடி விலை உயர்வுகள் குறித்து ஆராய்ந்திருக்கிறது. கோதுமை மா, காய்கறி, கான் ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட வழிவகைகள் குறித்து இக்குழு ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவிருக்கிறது. (ம)




பிலிப்பைன்ஸில் அமெரிக்காவுக்குஎதிரான ஆர்ப்பாட்டக்காரர்கள் அமெரிக்கக் கொடியைத் தீக்கிரையாக்கினர்

மணிலாவில் உள்ள அமெரிக்கத் தூதரகம் முன் சுலோகங்களுடன் திரண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் பாரசீக வளைகுடாவில் இருந்து தனது துருப்புக்களை அதிபர் புஷ் வாபஸ்பெற வேண்டும் என்று குரல் எழுப்பினர். (ஐ)

## துருக்கியில் மீண்டும் பூகம்பம்

இஸ்தான்புல்,ஜன.28

துருக்கி நாட்டின் கிழக்கு பிராந்தியத்தை பலமான பூமி அதிர்ச்சி தாக்கியிருக்கிறது என்று அறிவிக்கப்படுகிறது. பலகட்டடங்கள் சேதமடைந்திருக்கின்றன. உயிரிழப்புகள் பற்றி உடனடியாக எந்தத் தகவலும் வெளியாகவில்லை.

ரிச்டர் அளவுகோலில் 6.5 எனப் பதிவாகிய இந்த நிலநடுக்கம் துன்சிலி பிராந்தியத்தின் பல நகரங்களில் உணரப்பட்டது என்று அரசு சார்பு 'அனரோலியன்' செய்தி நிறுவனம் தெரிவித்தது.

பூகம்பம் ஏற்பட்டவேளை பாடசாலை ஒன்றினுள் இருந்து பாய்ந்து ஓட முற்பட்ட சிறுவர்களில் இருவர் காயமடைந்தனர். புளுமர் என்ற இடத்தை இந்த நிலநடுக்கம் மையமாகக்கொண்டிருந்தது. இதனால் புளுமரில் சேதம் அதிகமிருக்கலாம் எனநம்பப்படுகிறது.

வடமேற்கு துருக்கி பிராந்தியத்தை கடந்த 99 ஆம் ஆண்டு இரண்டு பெரிய பூமி அதிர்ச்சிகள் தாக்கியதில் சுமார் 20 ஆயிரம் பொதுமக்கள் உயிரிழந்தனர். (ஐ)

## பாகிஸ்தான் மணமகள் லண்டனில் கொலை!

பாகிஸ்தானைச் சேர்ந்த சய்தா பீபி (21) அவரது திருமண நாளில் சமீபத்தில் லண்டனில் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக பொலீஸார் அவரது உறவினர் ஹுசைனைத் தேடி வருகின்றனர்.

திருமண விழா நடைபெற ஒரு சிலமணி நேரமே இருந்த நிலையில் மாடியில் அவரது அறையில் சய்தா பீபி கொலை செய்யப்பட்டார். இந்த திருமணம் நடப்பதில் அதிருப்தியுடன் இருந்த ஹுசைன் (37), மணமகளைக் கொலை செய்துவிட்டு தப்பி ஓடிவிட்டார்.




யுத்தத்துக்கு எதிரானவர்கள் துருக்கியில் நடத்திய பேரணியின் காட்சி.

ஈராக் மீது அமெரிக்கா நடத்த இருக்கும் போருக்கு எதிராக சுமார் 5 ஆயிரம் பேர் இஸ்தான்புலில் இந்தப் பேரணியை நடத்தினர்.

சேகுவராவின் படத்தை தாங்கிக் கொண்டு அமெரிக்கா வுக்கு எதிரான கோசங்களை அவர்கள் எழுப்பினர். (ஐ)

# ஈராக் மீது அணுகுண்டு அமெரிக்கா வீசுமா?

## ஓர் இராணுவ நிபுணரின் எதிர்பார்ப்பு

வாஷிங்ரன்,ஜன.28

ஈராக்மீது அணுகுண்டு வீசித் தாக்குதல் நடத்த அமெரிக்கா தயாராகி வருவதாக இராணுவ நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார். பூமிக்கடியில் மறைந்திருந்து ஈராக படைகளைத் தாக்கி அழிக்கவும் பேரழிவு ஆயுதங்களை ஈராக் பயன்படுத்துவதை தடுத்து நிறுத்துவதற்காகவும் அணுகுண்டு வீச அமெரிக்கா தயாராகி வருகிறது என இராணுவ நிபுணர் வில்லியம் ஆர்கின் தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பான முடிவு அமெரிககாவின் நெப்ரஸ்கா மாநிலம் ஒமாகா நகரிலுள்ள இராணுவ அலுவலகத்தில் நடந்த இரகசிய கூட்டத்திலும் பென்ரகனிலுள்ள இராணுவத் தலைமைத் தளபதி அலுவலகத்திலும் அதுதவிர, பயங்கரவாதிகள் தாக்குதல் மிரட்டல் விடும்போதெல்லாம் அமெரிக்க துணை அதிபர் ரிச்சார்ட்செனி ஒய்வெடுக்கும் இரகசிய இடத்திலும் எடுக்கப்பட்டதாக ஆர்கின் கூறினார்.

'லொஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ்' நாளேட்டிற்கான தமது கட்டுரையில் ஆர்கின் இதைத் தெரிவித்துள்ளார். பதுங்கு குழிகளை பூமிக்குள் சென்று அழிக்கும் திறன் படைத்த குண்டுகள் அமெரிக்கா பயன்படுத்தும் பட்சத்தில் அணுகுண்டுகளைப் பயன்படுத்தும் வாய்ப்பு குறையும் என்றும் அவர் கூறினார்.

சக்திவாய்ந்த வெடிகுண்டுகளையும் தாங்கக்கூடிய கட்டடங்கள், இராணுவ நிலைகள்மீது அணுகுண்டு வீசித் தகர்ப்பது தொடர்பாக 2001இல் நடந்த ஆய்வில் கையெழுத்திட்டிருந்தார். அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட். இதையடுத்து, ஈராக், ஈரான், வடகொரியா, லிபியா மற்றும் சிரியா போன்ற நாடுகள்மீது அணுகுண்டுகள் வீசுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

எதிரி நாடுகள் பேரழிவு ஆயுதங்களை முதலில் பயன்படுத்தா விட்டாலும் அவற்றின்மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது என்றும் ஆர்கின் தெரிவித்தார். (ஐ)

# அமெரிக்காவின் சொல்கேட்டு அழிவுப் பாதையில் செல்லாதீர்!

## பாக். ஆட்சியாளருக்கு அறிவுரை

புதுடில்லி,ஜன.28

அமெரிக்காவின் சொல்லைக் கேட்டு அழிவுப்பாதையில் செல்ல வேண்டாம் என்று பாகிஸ்தான் அரசை ஜிஹாதிகள் எச்சரித்துள்ளனர்.

இஸ்லாத்துக்கு எதிராக அமெரிக்கா செயல்படுகிறது. யூதர்களும், இந்துக்களும் அமெரிக்கா என்ற சாத்தானுடன் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர். உலகில் முஸ்லிம்களுக்கு எதிரான போரை அமெரிக்கா தொடங்கியுள்ளது.

இந்தநிலையில் அமெரிக்கா சொற்படி நடந்தால் பாகிஸ்தான் அரசுக்குத்தான் ஆபத்து. அடுத்தவர் பேச்சைக் கேட்டு நடந்தால் பாகிஸ்தான் ஒருபோதும் சுதந்திரமாகச் செயற்படமுடியாது.

அல்லாவின் மீது நம்பிக்கை வைத்து அவரது விருப்பப்படி நாம் செயற்பட்டால் எந்த தீய சக்தியும் நம்மை நெருங்கமுடியாது.

நமது நாட்டில் உள் விவகாரங்களில் வெளிநாடுகளின் தலையீட்டை அனுமதித்தால் நாம் ஒருபோதும் சுதந்திரமாகச் செயற்படமுடியாது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இத்தகவலை 'பிரைடே டைம்ஸ்', 'ஜார்ப் இ மொமின்' பத்திரிகைகள் செய்தியாக வெளியிட்டுள்ளன.(ஐ)

### ஈராக் மீதான போருக்கு

# நட்பு நாடுகளிடம் ஆதரவு கோருகிறார் அதிபர் புஷ்

வாஷிங்ரன்,ஜன.28

ஈராக் மீது போர் தொடுக்க தனது நட்பு நாடுகளின் தலைவர்களுடன் தொலைபேசியில் பேசி ஆதரவு திரட்டி வருகிறார் அமெரிக்க அதிபர் புஷ்.

ஜப்பான் பிரதமர் கொய்சுமி, இத்தாலி பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி ஆகியோருடன் அவர் தொலைபேசியில் 15 நிமிடங்கள் பேசினார்.

ஈராக் பிரச்சினை மற்றும் வடகொரியா பிரச்சினை பற்றி ஜப்பான் பிரதமருடன் புஷ் விவாதித்தார். மீண்டும் அணுகுண்டு தயாரிக்கப் போவதாகவும், அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்திலிருந்து விலகப் போவதாகவும், வடகொரியா அறிவித்துள்ளதால் மற்ற நாடுகள் அச்சமடைந்துள்ளன. வடகொரியா மற்றும் ஈராக் தொடர்பான விடயங்களில் அவ்வப்போது கலந்து ஆலோசிக்கவேண்டும் என்று இரு தலைவர்களும் உறுதி எடுத்துக்கொண்டனர்.

ஈராக் பற்றிய அமெரிக்காவின் கொள்கையை இத்தாலி பிரதமர் ஆதரித்தார். இதனிடையே சுவிட்சர்லாந்தில் பேசிய அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவெல், ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்த 6 நட்பு நாடுகள் ஆதரவு அளித்துள்ளதாகக் கூறினார். (ஐ)

# மாவோ தீவிரவாதிகளின் தாக்குதலில் பொலீஸ் உயர் அதிகாரி, மனைவி பலி!

## நேபாளத்தில் அதிர்ச்சிச் சம்பவம்

காத்மண்டு,ஜன.28

நேபாள ஆயுதப் படைப் பொலீஸ் தலைவர் கிருஷ்ணமோகன் ஷ்ரெஸ்தா, அவரது மனைவி மற்றும் மெய்க்காப்பாளரை மாவோ தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றனர்.

இச்சம்பவம் காத்மண்டு புறநகர்ப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு நடந்தது.

ஷ்ரெஸ்தாவும் அவரது மனைவியும் காலையில் 'வோக்கிங்' சென்று கொண்டிருந்தனர். அப்போது அங்கு 20 முதல் 25 பேர் கொண்ட முகமூடி அணிந்து வந்த நபர்கள் மிக அருகிலேயே அவர்களைச் சுட்டுக் கொலை செய்ததாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறினர்.

ஷ்ரெஸ்தாவும் அவரது மெய்க்காப்பாளரும் அந்த இடத்திலேயே இறந்தனர். ஷ்ரெஸ்தாவின் மனைவி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் இறந்தார்.

பனிமூட்டத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தீவிரவாதிகள் அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

மாவோ தீவிரவாதிகளை ஒடுக்கும் நோக்கில் ஆயுதப் பொலீஸ் பிரிவை கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு நேபாள அரசு உருவாக்கியது. அதன் தலைவராக ஷ்ரெஸ்தா நியமிக்கப்பட்டார். இப்படையில் 15 ஆயிரம் பொலீஸார் உள்ளனர்.

மாவோ தீவிரவாதிகள் பொலீஸ் உயர் அதிகாரியைக் கொலை செய்தது இதுதான் முதல்முறை. இக்கொலைக்கு இதுவரை யாரும் பொறுப்பேற்கவில்லை.

சம்பவம் நடந்த பகுதியைப் பாதுகாப்புப் படையினர் சுற்றி வளைத்துள்ளனர். குற்றவாளிகளை நேபாள பாதுகாப்புப் படையினரும் பொலீஸாரும் வலைவீசித் தேடி வருகின்றனர்.

### கென்ய அரசு விளக்கம்

# அதிக சுமையினாலேயே விமானம் வீழ்ந்தது!

நைரோபி,ஜன.28

கென்யாவில் அந்நாட்டு தொழில் அமைச்சரை, பலி கொண்ட விமான விபத்து பற்றி அரசு விளக்கமளித்திருக்கிறது.

கென்யாவின் வடக்கு நகரமான புளியாவில் இலகுரக விமானம் ஒன்று மின் கேபிள்களில் மோதி வீழ்ந்ததில் அமைச்சர் ஒருவரும் இரண்டு விமானிகளும் உயிரிழந்தனர் என்பதும், வேறு நான்கு அமைச்சர்கள் காயமடைந்தனர் என்பதும் தெரிந்ததையே.

அதிகளவு பயணிகளை ஏற்றிச் சென்றதாலேயே இந்த விமானம் விபத்துக்குள்ளானதாக அதிகாரிகள் தெரிவித்தனர். விமானத்தைத் தரையிறக்குமாறு விடுக்கப்பட்ட உத்தரவு தொடர்பாக விசாரணையாளர்கள் ஆராய்ந்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பயங்கரமான புழுதிப் புயல் சீனாவில் உருவாகி வருகிறது!

லண்டன்,ஜன.28

சீனாவில் உருவாகிவரும் மிகப்பெரிய புழுதிப்புயல் அந்நாட்டில் பெரும் அழிவை ஏற்படுத்தக்கூடும் என்று லண்டனில் இருந்து வெளியாகும் 'இண்டிப்பெண்டன்ட்' என்ற பத்திரிகையில் தகவல் வெளியிட்டிருக்கிறது.

வாஷிங்ரனில் உள்ள நில ஆய்வு நிலையத்தின் தலைவர் லெஸ்டர் பிரவுண் இதைத் தெரிவிப்பதாக அப்பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.

இந்தப் புழுதிப் புயல் ஆயிரக்கணக்கான கிலோமீற்றர் பரப்பளவுக்குப் பரந்து விரிந்துள்ளது. வடக்கு சீனாவில் இது தோன்றியுள்ளது.

1930 ஆம் ஆண்டு அமெரிக்காவில் பேரழிவை ஏற்படுத்திய புழுதிப் புயலைவிட இது மோசமானதாக இருக்கக்கூடும்.

தரையிலுள்ள வளமான மண்ணையெல்லாம் அப்படியே அள்ளிச்சென்று கருமேகமாக உருவாகும் இப்புயல் காரணமாக சீனாவில் பெய்ஜிங் உட்பட பெரிய நகரங்களில், பகல் நேரமே இருட்டாகிவிடும் - என்று கூறப்படுகின்றது. (ஐ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## காணி விற்பனைக்கு

பாஷையூரில் புனித அந்தோனியார் கோயிலுக்கு அண்மையில் புங்கங்குளம் வீதியில் வீடு கட்டக்கூடிய 11/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ.திருச்செல்வம், 'வளனகம்', சக்கோட்டை, அல்வாய். (சி-26241)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

அழகான Miniature Dachund நாய்க்குட்டிகளும், அழகான Great Dane - Dobermann Pincher பெண் நாய்க்குட்டியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரா வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (13782)

## மணமகன் தேவை

யாழ்.கிறிஸ்தவ கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கனடாவில் கொம்பியூட்டர் எஞ்சினியரிங் செய்யும் 1974இல் சித்திரை நட்சத்திரத்தில் பிறந்த மணமகளிற்கு கனடா, U.K. அல்லது ஆஸ்திரேலியாவில் தகுந்த மணமகன் தேவை. தொடர்பு T.P. 021 222 3034, 070 212980. (13759)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் 43 வயது, சதயம் 8இல் செவ்வாய் (பாவம் குறைவு) சொந்தமாக நிறுவனம் நடத்தும் விவாகரத்துப் பெற்றவருக்குத் தகுந்த மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். சாதகக் குறிப்பு உட்பட சகல விவரங்களையும் அனுப்ப வேண்டிய முகவரி: விளம்பர இல.1759, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (13784)

## SHORTHAND

பிற்மன் ஆங்கில சுருக்கெழுத்தையும் தமிழ் சுருக்கெழுத்தையும் முழுமையாக சமகாலத்தில் 80 மணித்தியாலங்களில் 800 ரூபாவுக்குக் கற்கலாம். பகல், இரவு வகுப்புகள். 37(1-49), சிவன்பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (13781)

## வாடகைக்கு வீடு தேவை

சிவத் தியான நிலையம் ஒன்று நடத்துவதற்கு யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வீடு ஒன்று வாடகைக்குத் தேவை. தகுந்த வாடகை வழங்கப்படும். (நல்லூர் சுற்றாடலில் விரும்பத்தக்கது) கடிதமூலமாகவோ, நேரிலோ தொடர்புகொள்ளலாம். இல. 258, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். T.P.: 222 2442. (13716)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 30-01-2003, 06-02-2003 திகதிகளில் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (13783)

## For Sale Dental Chair

Dental Chair மற்றும் அத்துடன் இணைந்த உபகரணங்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ.திருச்செல்வம், "வளனகம்", சக்கோட்டை, அல்வாய். (சி-26240)

## பொதுக் கூட்டங்கள்

யாழ்பாணம்,ஜன.28

தென்மராட்சி ஓய்வூதியம் பெறுவோர் நலன்புரிச் சங்கத்தின் 12 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 2 திகதி முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-5)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜன.28

வேலணை சைவப்பிரகாச வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை புதன்கிழமை 12.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பாடசாலையின் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார். (எ-5)

# கண்ணீர் அஞ்சலி



சுழிபுரம் கிழக்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த

**திருமதி நவரத்தினம் இராசமணி**

அவர்கள் 23. 01. 2003 வியாழனன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று நெஞ்சம் நெகிழும் உள்ளங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*சுழிபுரம் கிழக்கு,*
*சுழிபுரம்.*

(13754)

# மரண அறிவித்தல்

## திருமதி நவரத்தினம் இராசமணி

சுழிபுரம் கிழக்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த திருமதி நவரத்தினம் இராசமணி 23.01.2003 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் சிவநடராசா(இந்தியா), காலஞ்சென்ற இந்திரராசா, சந்திரராசா(பிரான்ஸ்), சற்குணராசா(பிரான்ஸ்), தவமலர்(சுழிபுரம்), மதிவதனி(ஜேர்மனி), வர்ணமகாராசா(பிரான்ஸ்), சிவானந்தராசா(பிரான்ஸ்), நித்தியானந்தராசா(கனடா), சிறீஸ்கந்தராசா(சங்கானை பல நோ.கூ.சங்கம்), வசந்தராசா(சுழிபுரம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயலட்சுமி, சாரதாதேவி, சகுந்தலா, பகவத்கீதா, தவச்செல்வம், கணேசதாசன், சியாமளா, ரத்தினவள்ளியம்மா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான பொன்னையா, செல்லத்துரை, சரஸ்வதி, மாணிக்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுப்பிரமணியம், தம்பிஜயா, நாகேஸ்வரி, ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜெயரட்ணம், சிவனேஸ்வரி, சிவறஞ்சன், சிவறஞ்சினி, பிரியதர்சினி, சிவதர்சினி, கபதர்சினி, பார்த்திபன், பிரதீபன், கௌசல்யா, இந்துமதி, சங்கீர்தா, பவதாரணி, சாருசா, தினேஸ், சர்மினி, ஜிந்தா, விஜிந்தன், நவனியா, சந்தோஷ், சங்கீத், டர்சன், தினேஸ், பிரகாஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் வாகீசனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(28.01.2003) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.*
*T.P.: 070 212314 021 2225271*

*தகவல்:*
சிறீஸ்கந்தராசா *(மகன்)*

(13717)

## எரிபொருள் நிலைய திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜன.28

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் வேலணை, வங்களாவடிச் சந்தியில் புனரமைக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்தின் திறப்பவிழா இன்று முற்பகல் 11.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (எ-5)

## வீதி பலத்த சேதம் பாதசாரிகள் சிரமம்

கரவெட்டி,ஜன.28

புலோலி, சாரையடி - பருத்தித்துறை பிரதானவீதி குன்றுங் குழியுமாகக் காணப்படுகிறது.

இதனால், வாகனம் செலுத்துவோரும், பாதசாரிகளும் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

மேற்படி பிரதான வீதியினூடாக பருத்தித்துறை - யாழ்ப்பாணம், பருத்தித்துறை - கொடிகாமம், பருத்தித்துறை- சங்கானை, சுன்னாகம் போன்ற இடங்களுக்கான போக்குவரத்து இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (எ-70)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.28

தீவக லயன்ஸ் கழகமும், அகதிகள் புனர்வாழ்வுக் கழகமும் இணைந்து நடத்திய கணனி விழிப்புணர்வு பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகா வித்தியாலயத்தில் தீவக லயன்ஸ் கழகத் தலைவர் தேவநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-5)

## பிராந்திய முகாமையாளர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஜன.28

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய முகாமையாளராக ரி.பார்த்திதாசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி இவர் தமது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். இவரே மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான கடமையையும் நிறைவேற்றுவார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-10)

## 'நீர்'ஆய்வுப்பரிசோதனை மீண்டும் இங்கு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.28

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் மீண்டும் 'நீர்' தொடர்பான ஆய்வுகூடப் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஒன்றரை வருடங்களின் பின்பு மீண்டும் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து, நீரின் பௌதிக, இரசாயனத் தன்மைகள் இனங்காணப்பட்டுவருவதுடன், நீரில் உள்ள நுண்கிருமிகளின் தாக்கங்கள் பற்றியும் கண்டறியப்பட்டு வருகிறது என்றும்-

இது தொடர்பான அறிவுரைகள் எதிர்காலத்தில் பொதுமக்கள் மற்றும் பொது நிறுவனங்களுக்குத் தெரிவிக்கப்படும் என்றும் - சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டில் தற்பொழுது பரவும் நோய்கள் மற்றும் தாக்கங்களுக்கு நீரும் ஒரு காரணமாக இருப்பதால் இந்த ஆய்வுகூடப் பரிசோதனைகள் மிகவும் அவசியமாக உள்ளன என்றும் - கூறப்பட்டன. (எ-10)

## தென்மராட்சி கிழக்கில் சுயதொழிலுக்கு உதவி

தென்மராட்சி,ஜன.28

தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள ஆறு கிராம அலுவலர் பிரிவுகளில் பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினர் விவசாய நடவடிக்கை மற்றும் சுயதொழில் முயற்சி உதவிகளை வழங்கவுள்ளனர்.

கொடிகாமம் மத்தி, மீசாலை மேற்கு, மீசாலை கிழக்கு, அல்லாரை, கச்சாய், பாலாவி ஆகிய ஆறு கிராம அலுவலர் பிரிவுகளிலேயே இரண்டு மாத வேலைத் திட்டங்களை இவர்கள் ஆரம்பித்துள்ளனர்.

இப்பகுதியில் உள்ள சேதமடைந்த கிணறுகளும் புனரமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# ஒளிவிழாக் காட்சிகள்



இலங்கை மின்சார சபையின் யாழ்.அரச பணிமனை நடத்திய ஒளிவிழா நிகழ்வுகள் அண்மையில் மின் அத்தியட்சகர் அலுவலகத்தில் நடைபெற்றன.

விருந்தினர்களான யாழ்.பேராலயப் பங்குத் தந்தை வண.பிதா மைக்கல் சௌந்தரநாயகம், குருநகர் பங்குத்தந்தை வண.பிதா பி.ஜெயசேகரம் ஆகியோரை மின்சாரசபையின் வடபிராந்திய பிரதிப் பொதுமுகாமையாளர் ஆர்.முத்துரட்ணானந்தம் விழா மண்டபத்துக்கு அழைத்துச் செல்வதைப் படத்திற்காணலாம். (எ)



நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்தில் ஒளிவிழா அண்மையில் நடைபெற்றது. நாவாந்துறை பங்குத்தந்தை வண.பிதா பீற்றர் துரைரட்ணம் அடிகளார் ஒளியேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதைப் படத்திற்காணலாம்.

அருகில் பிரதமவிருந்தினரான யாழ்.மறைக்கோட்ட முதல்வரும், யாழ்.பேராலய பங்குத் தந்தையுமான வண.பிதா மைக்கல் சௌந்தரநாயகம் அடிகள் மற்றும் பாடசாலை அதிபர், பிரதி அதிபர் ஆகியோர் காணப்படுகின்றனர். (எ-51)



குருநகர் அறிவகம் அமைப்பின், ஒளிவிழா யாழ்.சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.தவரட்ணம் மங்கள விளக்கேற்றுவதைப் படத்திற்காணலாம். அருகில் சிறப்புவிருந்தினர்கள் காணப்படுகின்றனர். (எ-51)



குருநகர் புனித ஆரோக்கியநாதர் ஆலய திரு இருதயநாதர் இளைஞர் இணையத்தின் ஒளிவிழா புனித ஆரோக்கியநாதர் ஆலயத்தில் நடைபெற்றது. விழாவின் சிறப்பு நிகழ்வாக இடம்பெற்ற 'நாளைய உலகை ஆளவேண்டும்' என்ற நாடகத்தில் ஒரு காட்சியைப் படத்திற்காணலாம். (எ-51)

# உதயன்

## பிரதமரின் பதிலடி

தமிழர் தரப்போடு சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அந்த சமாதானப் பேச்சுக்களின் பின்னணி பற்றிய சில தகவல்களை - தனது கருத்துக்களை - யதார்த்தபூர்வமான நிலையை - வெளியிட்டிருக்கிறார்.

தற்போதைய சமாதானப் பேச்சுக்களைக் குழப்பும் முனைப்போடு சிங்களத் தீவிரவாதப் போக்கும் இனவாதப் போக்குமுடைய தரப்புகளால் எழுப்பப்பட்டுவரும் கூச்சல்களுக்கு தக்க பதிலளிக்கும் வகையில் பிரதமர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

"இருபது வருடங்களாகப் புலிகளுடன் போராடினோம். எதைக் கண்டோம்? அறுபதாயிரம் உயிர்களைப் பறிகொடுத்தோம்; தேசிய சொத்துக்களை இழந்தோம். நாம் சில வெற்றிகளைக் கண்டோம்; புலிகளும் சில வெற்றிகளைக் கண்டனர். ஆனால், நாட்டின் பொருளாதாரம், அபிவிருத்தி, அமைதி எல்லாம் சீர்குலைந்துவிட்டனவே!" - என்று சுட்டிக்காட்டியிருக்கிறார் பிரதமர்.

"இந்தக் காரணங்களினால்தான் புலிகளுடன் பேசுகிறோம். குண்டுவெடிப்புக்களையும், உயிர் இழப்புகளையும் நிறுத்தியுள்ளோம். அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அத்திவாரம் இட்டுள்ளோம்" - என்றும் தெரிவிக்கின்றார் பிரதமர்.

சமாதானத்தைக் குழப்ப விரும்பும் இனவாத சக்திகள் புலிகளின் செயற்பாடுகளை முக்கிய காரணங்களாகக் காட்டுகின்றன.

புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தனி இராணுவம் வைத்திருக்கின்றார்கள். தனியான பொலீஸ்துறை, நீதிமன்றங்கள், நிர்வாக சேவை போன்றவற்றைக் கொண்டு நடத்துகின்றார்கள். இப்படி நாட்டுக்குள் தனி அரசு வைத்திருக்கும் புலிகளுடன் பேசுவதா? பேச்சைத் தூக்கி மூலையில் கிடாசிவிட்டு புலிகளை - தமிழர்களை - இராணுவ ரீதியில் அடக்கப் பாருங்கள் என்று கூக்குரலிடுகின்றார்கள் அவர்கள்.

ஆனால், முடிவுபெறாத யுத்தத்தை மேற்கொள்வதன்மூலம் எதையும் சாதித்துவிட முடியாது - அழிவைத் தவிர. இதனைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நன்கு உணர்ந்திருக்கிறார் என்பதை அவரது தற்போதைய கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன.

"ஒரு பிரச்சினை தீரவேண்டுமானால் இருபக்கப் புரிந்துணர்வையும், ஒரு தரப்பு மறுதரப்பின் நிலைப்பாட்டையும் அறிந்து செயற்படவேண்டும். அதைத்தான் இப்போது செய்கின்றோம்.

"புரிந்துணர்வுடன் பேச்சுக்கள் தொடர்கின்றன. தமிழர்களின் உரிமைகளை ஊர்ஜிதப்படுத்த சமஷ்டி முறையை ஏற்படுத்துவதற்கும் அரசு தயாராகிவிட்டது. இதனையேற்று தனிநாட்டுக் கோரிக்கையை புலிகள் கைவிட்டுள்ளனர். என்றாலும் தனி நீதிமன்றம், பொலீஸ் நிலையங்கள் என்பனவற்றைப் புலிகள் மூடிவிடவேண்டுமென்றோ, ஆயுதங்களைக் கைவிட்டுவிட வேண்டுமென்றோ இப்போது கேட்கமுடியாது. சமஷ்டித் தீர்வு ஏற்படும் போது இப்பிரச்சினை தானாக தீர்ந்துவிடும்" - இப்படி சிங்களத் தீவிரவாத - இனவாத - போக்குகளுக்கு தக்க விளக்கமளித்திருக்கின்றார் பிரதமர்.

சமாதானப் பேச்சுகளுக்கு முட்டுக்கட்டை - தடை - போடும் வகையில் அண்மைக்காலத்தில் இராணுவத்தின் சில மட்டங்களில் இருந்தும், ஜனாதிபதி குமாரதுங்க போன்ற சில அரசியல் தலைவர்களிடம் இருந்து வெளிப்படுத்தப்பட்டு வந்த கருத்துக்களுக்கு பிரதமரின் இப்போதைய கூற்று தக்க பதிலடியாக அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால், பிரதமரின் பிந்திய உரையில் சுட்டிக் காட்ட வேண்டிய திருத்தமும் ஒன்று உள்ளது.

"சமஷ்டி தீர்வைத்தர அரசு தயாராகிவிட்டது. அதை ஏற்றுப் புலிகள் தமது தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டுள்ளனர்" - என்று பிரதமர் கூறுவது தவறானது.

தமது தனிநாட்டுக் கோரிக்கைக்கு மாற்றீடாக சமஷ்டி ஆட்சிமுறையைப் பரிசீலிக்கப் புலிகள் தயாராகிவிட்டனர் என்பதே சரியானது. தமிழரின் அபிலாஷைகளை நிறைவுசெய்யத்தக்க - உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய - சமஷ்டித் தீர்வை முன்வைக்காமல், புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டனர் என்று பிரஸ்தாபித்துக் கொண்டிருப்பதில் பயனில்லை.

---

அளவெட்டி அதிரம்புலம் பகுதியில்

# வேவுவிமானம் வீழ்ந்ததால் ஏற்பட்ட பயிரழிவுக்கு விரைவில் நஷ்டஈடு

## படைத்தரப்பு அறிவிப்பு

சண்டிலிப்பாய்,ஜன.28

அளவெட்டியிலுள்ள தோட்டக்காணி ஒன்றில் கடந்த புதன் கிழமையன்று வேவு விமானம் ஒன்று விழுந்து நொருங்கிய சம்பவத்தில் பலத்த பாதிப்படைந்த தோட்டக்காணி சொந்தக்காரர்களுக்கு பயிரழிவுக்கான நஷ்டஈடு வழங்குவதற்குப் படைத்தரப்பு முன்வந்துள்ளது.

இந்தச் சம்பவத்தின்போது மேற்படி தோட்டக்காணிகளில் பயிரிடப்பட்ட வெங்காயம் முற்றாகச் சேதமடைந்தது.

இதனால் பாதிப்படைந்த ஏழை விவசாயிகளான தமக்கு பலத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும், இது குறித்து ஆராய்ந்து நஷ்டஈட்டினைப் பெற்றுத்தருமாறும் வலி.வடக்கு பிரதேச செயலகம் ஊடாகப் படைத்தரப்பினரிடம் சம்பந்தப்பட்ட விவசாயிகள் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இதனையடுத்து -

படைத்தரப்பினர் இப்பிரதேசத்துக்குப் பொறுப்பான - மாகியப்பிட்டியில் தற்போது இடம்பெயர்ந்து இயங்கிவரும் - கீரிமலை கமநல கேந்திர நிலையப் பெரும்பாக உத்தியோகத்தரிடம் தொடர்புகொண்டு விவசாயப் பயிர்கள் மற்றும் வெங்காயப் பயிர்கள் அழிவுக்கு எவ்வளவு தொகை நஷ்டஈடாக வழங்கப்படவேண்டும் என்பதை மதிப்பீடு செய்துதருமாறு கேட்டுள்ளதாக அறியப்படுகின்றது. (எ-135)

# மண் ஆய்வுக்கான பணிகள் மருந்துகள் இன்றித் தாமதம்!

வலிகாமம் தெற்கு,ஜன.28

திருநெல்வேலியிலுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் மண் பற்றிய பகுப்பாய்வுப் பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான மருந்துகள் மற்றும் இரசாயனப் பொருள்கள் இன்மையினால் மண் ஆராய்ச்சிப் பணிகளில் தடங்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மண் ஆராய்ச்சிப் பணிகள் கடந்தகால யுத்த சூழ்நிலைகளின் பின்னர் கொழும்பிலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஆயினும், அவற்றை மீண்டும் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு வேண்டிய உபகரணங்கள் அண்மையில் எடுத்துவரப்பட்டுள்ளன.

இந்நிலையில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கான இரசாயனப் பொருள்கள் இதுவரை எடுத்துவரப்படாமையினால் மண் பற்றிய பகுப்பாய்வுப் பணிகளில் தொடர்ந்தும் தடங்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-152)

# அளவுக்கதிகமாக உர வகைகளைப் பாவித்தல் பயிரழிவுக்கும், நீர் மாசுறுதலுக்கும் வழிவகுக்கும்

## எச்சரிக்கிறார் விவசாயப் போதனாசிரியர்

சண்டிலிப்பாய்,ஜன.28

குடாநாட்டு விவசாயிகள் இலாப நோக்கம் கருதி உர வகைகளை அதிகளவில் பயன்படுத்திவருவதை அவதானிக்க முடிகிறது. அளவுக்கதிகமான உரப் பாவனையால் பயிர்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதுடன், நிலத்திற்கடியிலுள்ள நீர் மாசுபடுவதற்கும் காரணமாகின்றது.

- இவ்வாறு எச்சரித்துள்ளார் கீரிமலை கமநலகேந்திர நிலைய விவசாயப் போதனாசிரியர் திருமதி பரமேஸ்வரி மணிவண்ணன்.

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தின் 7ஆவது வருடாந்த பொதுக் கூட்டமும், விவசாயக் கருத்தரங்கும் கடந்த ஞாயிறன்று கட்டுடையில் உள்ள சம்மேளன அலுவலகத்தில் தலைவர் சி.பொ.ம.கா. முதலியார் தலைமையில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

விவசாயிகள் இரசாயன கிருமிநாசினிகளைப் பாவிக்கும் போது திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்டவற்றையே பெற்றுப் பயன்படுத்த வேண்டியது அவசியம். மரக்கறிப் பயிர்களுக்கு கிருமிநாசனி விசிறிய பின்னர் ஒருவாரம் முதல் இருவார காலம் வரையின் பின்பே மரக்கறிகளைச் சந்தைப்படுத்தக் கொண்டு போகவேண்டும்.

குறித்த பகுதி விவசாயிகளில் பலர் தாங்கள் செய்கை பண்ணிய வல்லாரை, பொன்னாங்காணி ஆகிய கீரை வகைகளை முதல் நாள் கிருமிநாசனியைத் தெளித்துவிட்டு மறுநாள் சந்தைக்கு விற்பனைக்குக் கொண்டுசெல்வதாக எமக்கு புகார்கள் கிடைத்துள்ளன.

இதனால், பாவனையாளர்கள் நஞ்சு ஊறிய காய்கறிகளையும், கீரை வகைகளையும் உட்கொள்ளும் அபாய நிலை ஏற்படுகின்றது. சிலர், கிருமிநாசனியை அதற்குரிய தெளிகருவி மூலம் தெளிக்காமல் பூவாளிமூலம் தெளிப்பதால் அளவுக்கதிகமான நஞ்சுத் தன்மை மரக்கறிகளிலும் கீரை வகைகளிலும் ஏற்பட ஏதுவாகின்றது. இந்த அபாயநிலை தவிர்க்கப்படவேண்டும்.

விவசாயிகள் சம்மேளனங்கள் இது குறித்து தங்கள் பகுதி விவசாயிகளிடம் விளக்கிக் கூறி நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

உடுவில் கமநல கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் வி.இளங்குமரன் உரையாற்றுகையில்:-

யாழ்.மாவட்டத்தில் 986 சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் உள்ளன. இவற்றைப் பேணிப் பராமரிக்கும் பெரும் பொறுப்பு அவ்வப் பகுதி விவசாயிகள் சம்மேளனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மழை நீரை வீணாக்கவிடாது குளங்களில் தேக்கி வைப்பது மிகவும் அவசியம். நிலத்தடிநீர் உவர் நீராக மாறிவரும் இக்கால கட்டத்தில், மழை நீரை குளங்களில் தேக்கி வைப்பதன்மூலம் எமது நீர் வளத்தைப் பாதுகாக்கமுடியும்.

விவசாய சம்மேளனங்கள் விவசாயிகளின் பிரச்சினைகளையும், அவர்களின் கஷ்டங்களையும் நீக்குவதற்கும் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்குமாகக் கடந்த 1994ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டன. மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் எமது பகுதியில் குறிப்பிடத்தக்க சேவைகளை ஆற்றிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

வழுக்கையாற்று அபிவிருத்தித் திட்டத்தை இந்த சம்மேளனம் முன்வைத்து விவசாய அபிவிருத்திக்காகக் குரல்கொடுத்து வருவதைப் பாராட்டமால் இருக்கமுடியாது - என்றார்.

சம்மேளன உறுப்பினர்களுக்கு 2003ஆம் ஆண்டுக்கான கலண்டர்கள் இலவசமாக வழங்கப்பட்டன. (எ-135-152)

# சங்கானை அரசினர் ஆஸ்பத்திரியில் மருந்துவகைகளுக்குத் தட்டுப்பாடு

சண்டிலிப்பாய்,ஜன.28

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் முக்கிய மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவிவருகின்றது.

இதனால், பொது மருத்துவ கிளினிக், நீரிழிவு கிளினிக் ஆகியவற்றில் சிகிச்சை பெறவரும் நோயாளர்கள் தமக்குரிய மருந்துகளைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கிவருவதாகக் கூறப்பட்டது.

இதேவேளை - மேற்படி விவகாரம் குறித்து வைத்தியசாலை அபிவிருத்தி சங்கம் விடுத்த வேண்டுகோளை அடுத்து, ஒரு தொகை மருந்துகளை சங்கானை வர்த்தகர் சங்கம் இவ்வாரம் வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (எ-135)

### நாளை

தை 15
புதன்கிழமை
(29.01.2003)
திதி : துவாதசி
முன்னிரவு 7.05 வரை.
நட்சத்திரம் : மூலம்
பின்னிரவு 2.07 வரை.
மரணயோகம்
சுபநேரம் : 5.06 - 6.36
ராகுகாலம் : 12.36 - 2.06
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

உயிர் வாழும் பகைவனுக்குப் பயந்து ஓடுவதோ, இறந்துபட்ட பகைவனைப் பழித்து தூற்றுவதோ கோழைத்தனமாகும்.

# பளை உதவி அரசாங்க அதிபரை தொடர்ந்து கடமையாற்ற அனுமதிக்குக!

## கிளிநொச்சி அரச அதிபரிடம் கோரிக்கை

பளை உதவி அரசாங்க அதிபராக நியமனம் செய்யப்பட்டுள்ள மண்முனை உதவி அரசாங்க அதிபரின் இடமாற்றத்தை ரத்துச் செய்து, தற்போது கடமையாற்றும் சு.புத்திசிகாமணியை தொடர்ந்து உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்ற அனுமதிக்குமாறு இப்பகுதி கிராமிய அபிவிருத்தி சங்கங்கள் உட்பட பல பொது அமைப்புக்கள் கிளிநொச்சி அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

இதுகுறித்து மேற்படி அமைப்புகள் கிளிநொச்சி அரச அதிபருக்கு மகஜர்களையும் அனுப்பிவைத்துள்ளன.

பளைப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு தற்போதைய உதவி அரசாங்க அதிபர் சு.புத்திசிகாமணி ஆற்றிய - ஆற்றிவருகின்ற - பங்களிப்புகள் குறித்தும் மேற்படி மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மகஜரின் பிரதிகள் தமிழீழ நிர்வாக சேவை, கிளிநொச்சி மாவட்ட நிர்வாக சேவை, பொதுநிர்வாக அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# பொது நிலையினர் மூலம் பக்தர்களுக்கு நற்கருணை

## குருநகர்ப் பகுதியில் ஏற்பாடு

குருநகர்,ஜன.28

குருநகர்ப் பகுதியில் உள்ள தேவாலயங்களில் பொது நிலையினரும் பக்தர்களுக்கு திவ்விய நற்கருணையை (சற்பிரசாதம்) வழங்குவதற்குரிய நடவடிக்கை வெகுவிரையில் ஆரம்பிக்கப்பட உள்ளதாக குருநகர் பங்குத்தந்தை வண.பிதா அ.பி.ஜெயசேகரம் அடிகள் தெரிவித்தார்.

தேவாலயங்களில் நடைபெறும் திருப்பலியின்போது குருக்கள், அருட்சகோதரிகளால் பக்தர்களுக்கு நற்கருணை வழங்கப்படுகிறது. திருப்பலியின் போது சற்பிரசாதம் வழங்குவதற்குத் தகுதியுள்ள பொது நிலையினரையும் பயன்படுத்தவேண்டும் எனவும், இவர்களுக்கு இறையியல் வகுப்புகளை நடத்தி அவர்கள் தெரிவுசெய்யப்படவேண்டும் எனவும், யாழ்.ஆயர் அதிவண தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அண்மையில் கேட்டிருந்தார்.

இதன்படி நற்கருணை வழங்குவதற்கு பொது நிலையினர் பயன்படுத்த உள்ளனர். அவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் குருநகர்ப் பகுதியில் ஆரம்பிக்கப்படும். குருநகரில் உள்ள தேவாலயங்களில் எதிர்வரும் பெப்ரவரி மாத இறுதிப் பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட பொது நிலையினர் மூலம் திவ்விய நற்கருணை பக்தர்களுக்கு வழங்கப்படும் - என்று வண.பிதா அ.பி. ஜெயசேகரம் மேலும் தெரிவித்தார். (ஐ-51)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 18 - 05 - 1924 | | 29 - 12 - 2002 |



## அமரர் கந்தப்பு கந்தையா

*(முன்னாள் பிரதம காசாளர், சினிமாஸ் லிமிட்டெட், கொழும்பு)*

**அன்போடு வாழ்ந்து ஆதரவு மொழிபேசி**
**பண்போடு உறவாடிய எமது அன்புத் தெய்வமே!**
**நீங்கள் மறைந்தாலும் உங்களது அன்பு நினைவு**
**எங்கள் நெஞ்சைவிட்டு ஒருபோதும் நீங்காது!**


எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டு எமது இல்லம் நாடி வந்து ஆறுதலும் தேறுதலும் அளித்த அன்புள்ளங் கொண்டவர்களுக்கும் இறுதி நிகழ்வின்போது பலவிதத்திலும் எமக்கு உதவிகள் புரிந்த உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றிகள்.

*27, முருகமூர்த்தி வீதி,*
*வண்ணார்பண்ணை.* (13542)

**- மகன், மருமகள்.**

# 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 18 - 06 - 1918 | | 29 - 12 - 2002 |



அமரர்

## வேலுப்பிள்ளை வல்லிபுரம்

*(ஓய்வுபெற்ற ஆசிரியர், மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை)*

எங்கள் அருமைத் தந்தையாரின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் ஏனைய பல வழிகளிலும் உதவியவர்களுக்கும் நன்றி. இன்று (28.01.2003) செவ்வாய்க்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"மகர ஜோதி"*
*பிள்ளையார் கோவில் ஒழுங்கை,*
*ஊரெழு மேற்கு, சுன்னாகம்.* (13751)

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



## அமரர் சண்முகம் பூமணி

**29.12.2002 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த அமரர் சண்முகம் பூமணி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (28.01.2003) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

தகவல்:
சண்முகம் குடும்பத்தினர்,
சிவா திருத்தகம் *(டயர் கடை),*
*நாச்சியார் கோயிலடி,*
*1306, கே.கே.எஸ். வீதி.*
கீர்த்தனா டயர் வேக்கல்
*664, கே. கே. எஸ். வீதி,*
*சிவலிங்கப்புளியடி.*

*29, காரைக்காட்டு லேன்,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (13772)

## கிராம அலுவலருக்கு பதவியுயர்வு

வலிகாமம்,ஜன.28

வலிகாமம் கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தரம் IIஇல் கடமையாற்றிவந்த கிராம அலுவலர்கள் 12பேர் தரம் Iற்கு பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

பதவி உயர்வுபெற்றுள்ள கிராம அலுவலர்களின் பெயரும், அவர்கள் கடமையாற்றும் பிரிவுகள் பற்றிய விவரமும் வருமாறு:

எஸ்.விக்கினேஸ்வரன் (உரும்பிராய் கிழக்கு), ரி.தங்கராசா (உரும்பிராய் வடக்கு), பி.மகேந்திரன் (நீர்வேலி மேற்கு), ஆர்.கணேசலிங்கம் (ஆவரங்கால் மேற்கு),

எ.குலேந்திரநாயகம் (ஆவரங்கால கிழக்கு), எஸ்.செல்வச்சந்திரன் (உரும்பிராய் மேற்கு), எஸ்.முத்துக்குமாரசாமி (கல்வியங்காடு), எஸ்.சிவகுலதிலகசிங்கம் (பத்தமேனி).

கே.இரட்ணராசா (கோப்பாய் மத்தி) கே.கதிரமலைநாதன் (வளலாய்), கே.வைத்தியநாதன் (புத்தூர் கிழக்கு), கே.ஸ்ரீஸ்கந்தராசா (சிறுப்பிட்டி கிழக்கு) (ஏ-180)

★ ★ ★

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த ஏழு கிராம அலுவலர்கள் தரம் II இல் இருந்து தரம் Iஇற்கு பதவியுயர்வு பெற்றுள்ளனர்.

எஸ்.தில்லைநடராசா, ஆர்.ஸ்ரீரஞ்சன், கே.குலசேகரம்பிள்ளை, என்.குமர குருநாதன், திருமதி ரி.சிவபாக்கிய நாதன், திருமதி ஆர்.குலவீரசிங்கம், வே.இரத்தினம் ஆகியோரே இவ்வாறு பதவியுயர்வு பெற்றுள்ள கிராம அலுவலர்களாவர். (எ-175)

## பனங்கிழங்கு சீசன் குடாநாட்டில் ஆரம்பம்

அரியாலை,ஜன.28

தற்போது பனங்கிழங்கு சீசன ஆரம்பமாகியதை அடுத்து யாழ். நகரில் அதற்கு பெரும் மவுசு ஏற்பட்டுள்ளது.

தென்பகுதியில் இருந்து யாழ். நகருக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் பனங்கிழங்கை அதிகளவில் கொள்வனவு செய்துகொண்டு செல்வதை அவதானிக்க முடிகிறது.

குடாநாட்டுச் சந்தைகளில் பனங்கிழங்கு ஒன்று ஒரு ரூபாமுதல் இரண்டு ரூபாவரை விற்பனை செய்யப்படுகின்றது. (எ-17)

## குருநகர் மீனவர் மத்தியில் 'நைலோன் வலை'பயன்பாடு திடீரென அதிகரிப்பு

அரியாலை,ஜன.28

குருநகர்ப் பகுதி மீனவர்கள் நீண்டநாள் இடைவெளிக்குப் பின்னர் நைலோன் வலைமூலம் மீன் பிடிக்கும் பணியை ஆரம்பித்திருப்பதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

நைலோன் வலை மீன்பிடிப்பு மூலம் மீனவர் ஒருவருக்கு அதிக எண்ணிக்கையான மீன்கள் பிடிபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

'றோலர்' மூலம் கடல் அட்டை பிடிக்கும் பணியில் ஈடுபட்ட மீனவர்கள் சிலர் அதைக் கைவிட்டு, நைலோன் வலைமூலம் மீன்பிடிக்கும் பணியை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-17)

## வெள்ளி தோறும் அன்னதானம்

சண்டிலிப்பாய்,ஜன.28

வட்டுக்கோட்டை மேற்கிலுள்ள ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திற்கு முன்னர் இருந்துவரும் புராதன ஆலயமான முருகையா ஆலயத்தில் இந்து கலாசார அமைச்சின் அனுசரணையுடன் வெள்ளிக்கிழமைதோறும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த 19ஆம் திகதி தைப்பூச தினத்தன்று இந்த அன்னதானம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் இந்த அன்னதானப் பணி நடைபெறும் என்று ஆலய திருப்பணிச் சபையினர் தெரிவித்தனர். (எ-135)

## 'நியாப்' திட்டத்தின் கீழ் குளங்கள் புனரமைப்பு

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனப் பகுதியிலுள்ள அட்டகிரிக்குளம், கீராய்க் குளம் ஆகிய இரண்டு குளங்களும் 'நியாப்' அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஆழமாக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் இக்குளங்களை ஆழமாக்கி புனரமைத்துத் தருமாறு உடுவில் கமநல சேவை நிலையத்தின் ஊடாக யாழ்.கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளரிடம் கடந்த ஆண்டில் வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-135)

## வலிகாம வலய அதிபர்கள் கூட்டம்

சண்டிலிப்பாய்,ஜன.28

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் கல்விவலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி நிர்வாகம்) சு.சுந்தரசிவம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார். (எ-135)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY




BIRTHDAY

## செல்வன் றோஸ்மன்

யேம்ஸ் - மரினா தம்பதிகளின் செல்வப் புதல்வன் றோஸ்மன் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (28.01.2003) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், தோட்டம்மா, தோட்டப்பா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்புடன் பல்கலையும் பெற்று சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

*No.2, றக்கா வீதி,*
*இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.* (13691)

அன்புடன் சித்தப்பாமார்.


# கொழும்பு - சென்னை சிங்கப்பூரில் தங்குமிட வசதி

**கொழும்பு - சென்னை - சிங்கப்பூரில் விடுமுறையைக் கழிக்க, திருமணப் பதிவுசெய்து, திருமணம் செய்ய வெளிநாடுகளில் இருந்து வருவோருக்கு, தளபாட சாமான்களோடு, சகல வசதிகளுடனான தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடுகளும், அவரவர் வசதிக்கு ஏற்ப செய்து தரப்படும். விமான நிலையத்திலிருந்து இலவச வாகன வசதி, சலுகைக் கட்டணத்தில் வாடகைக் கார்.**

மேலதிக விவரங்களுக்கு:

**LINGAM WEDDING SERVICE**

10, Anson Road, #15 - 14 International Plaza,
Singapore 079903

எந்நேரத்திலும் தொடர்புகொள்வதற்கு வசதியாக
கைத்தொலைபேசி எண்: அப்பு 0065 - 975 14 941

# மாணவர்களுக்கு ஒரு நற்செய்தி

இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட

- தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக வெளியீடுகள்.
- தஞ்சாவூர் சரஸ்வதி மகால் வெளியீடுகள்.
- சைவ சித்தாந்த கழக வெளியீடுகள்.
- வாழ்வியல்/அறிவியற் களஞ்சியம்.
- தமிழ் அகராதிகள்/பல்பொருள் அகராதி.

இன்னும் பல்துறைசார் நூல்களை 27ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதிவரை மூன்று தினங்களுக்கு விசேட கழிவுவிலையில் வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளோம். புத்தகங்களை வாங்கவிரும்பும் மாணவர்கள் இந்த நாள்களில் எமது புத்தக நிலையத்தில் பார்வையிட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

(மாணவர்களுக்கு மட்டும் இந்தச் சலுகை)

**புதிய உயர் கல்லூரி**
**புத்தகசாலை**

(13770) **ஆரியகுளம், யாழ்ப்பாணம்.**


# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## மூத்ததம்பி கந்தையா

(மட்டுவில் தெற்கு)

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 06-07-191[illegible] | 18-01-1993 |

திதி: 28-01-2003

*பத்தாண்டுகள் பறந்து போயினும்*
*உங்கள் தெய்வீக நிழலில் வாழும்...*

*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.* (13769)

- குடும்பத்தினர்.

# ஒன்றுபட்டு செயற்படும் எண்ணம் அரசுக்கோ, எதிர்க்கட்சிக்கோ இல்லை

**யுத்தநிறுத்த காலத்தில் விடுதலைப் புலிகள் அரசியல் மற்றும் யுத்த ரீதியாக தமது ஆற்றலைப் பெருக்கிக்கொண்டுள்ளனர். அதேநேரம் அரசு இந்த இரு துறைகளிலும் பலவீனம் அடைந்துள்ளது. நாட்டிற்காக ஒன்றுபட்டு பணியாற்றவேண்டிய எண்ணம் அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் இல்லை என்கிறார் கட்டுரையாளர் திசரணி குணசேகரா. 'லங்காதீப' பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.**

## மாற்றார் தோட்டத்திலிருந்து...

சமாதான நடவடிக்கைகளின எதிர்காலம் பற்றிய கேள்வியுடன் 2003 ஆம் ஆண்டு பிறந்துள்ளது. கடந்த ஆண்டின் இறுதிநாள்களில் வடக்கு - கிழக்கு பகுதிகளில் உள்ள உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சினை எதிர்பாராதவகையில் தீவிரம் அடைந்து இக்கட்டானநிலை வரை சென்றது. உயர்பாதுகாப்பு வலயங்களை விலக்கிக்கொள்ளல் மற்றும் விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைதல் ஆகியன தொடர்பாக யாழ். இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் அறிக்கையும், அவரது நிலைப்பாட்டினை ஸ்ரீலங்கா போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஆமோதித்ததும் விடுதலைப் புலிகள் அமைப்பின் கடும் ஆட்சேபத்துக்குக் காரணமாகின. சில மாதங்களுக்கு முன்னர் முன்நிபந்தனை போன்று தமது அமைப்பின் மீதான தடையை நீக்கி, புலிகள் சமாதானப் பேச்சுக்களை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதைப் போன்றே இத்தடையையும் அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றிவிடவேண்டுமென விடுதலைப் புலிகள் முன்நிபந்தனை விதிப்பதற்கு வாய்ப்புக்கள் உள்ளனபோல் தெரிகிறது.

இம்மாதம் ஆறாம் திகதி ஆரம்பமான சமாதான பேச்சுக்களின் போது இப்பிரச்சினைக்கே முன்னுரிமை அளிக்கப்படுமென விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் முன்னர் தெரிவித்திருந்தார்.

ஸ்ரீலங்கா இராணுவத்தை வடக்கு -கிழக்கு பிரதேசத்தில் இருந்து முழுமையாக அல்லது ஓரளவாவது விலக்கிக் கொள்வதற்கு அரசுக்கும வைக்கப்படவேண்டுமென அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருந்தார்.

இந்த நிலைமை காரணமாக அரசு மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகியுள்ளது. மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா மற்றும் இராணுவத்தரப்பு நிலைப்பாட்டினை தான் ஆதரிப்பதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார். ஆனால், அரசு இந்த விடயத்தில் தனது நிலைப்பாடு பற்றிய விவரம் எதனையும் இதுவரை தெரிவிக்கவில்லை. ஸ்ரீலங்கா இராணுவத்தின் நிலைப்பாடு குறித்து தனது ஆதரவை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு வெளியிட்டு இருக்கும் இந்த நிலையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் வேண்டுகோளுக்குச் சாதகமாகச் செயல்படுவது அரசுக்கு சிரமம் அளிக்கும். இன்னொரு வகையில் அதியுயர் பாதுகாப்பு வலயங்களை நீக்குவதென அரசு தீர்மானித்தாலும் அரசமைப்பின் பிரகாரம் முப்படைகளின் தலைவி என்ற வகையில் ஜனாதிபதி அம்முடிவினை எதிர்ப்பாரானால், அரசினால் தான் மேற்கொள்ளும் முடிவினை நடைமுறைப்படுத்த இயலுமா என்பது சிக்கலான விடயமாகும். இவ்விடயத்தில் அரசுக்கும் ஜனாதிபதிக்கும் இடையே அரசியல் - அரசமைப்பு என்ற வகையில் சிக்கல் நிலை உருவாகுமானால், அதில் ஜனாதிபதியின் தரப்புக்கே சாதகமான வாய்ப்பு உண்டென்பது நிச்சயம். ஆனால், பெரும் இழப்புக்களுக்கு மத்தியில் தாம் மீட்டெடுத்த பிரதேசத்தை வெறுமனே தற்காலிக யுத்த நிலைமைக்கு அமைய மீண்டும் விடுதலைப் புலிகள் அமைப்பிடம் கையளிப்பதற்கு இராணுவத்தில் பெரும் பாலானோர் விரும்பமாட்டார்கள் என்பதும

தமக்கும் இடையே இணக்கப்பாடொன்றைக் காணமுடியுமென்ற நம்பிக்கை விடுதலைப் புலிகளுக்கு உள்ளது என்பது அவர்களது அண்மைய பேச்சுகளிலிருந்து தெளிவாகிறது. உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக ஸ்ரீலங்கா இராணுவத்தரப்பின தறபோதைய அறிவிப்பு அந்த எண்ணத்தை சிதைத்துவிட்டது என விடுதலைப் புலிகள் அமைப்பு கருதுகிறது. "பல்லாயிரக்கணக்கான பொதுமக்களின் வாழ்விடங்களிலிருந்து ஸ்ரீலங்கா இராணுவம் வெளியேற மறுப்பது, போர்நிறுத்த உடன்பாட்டையும், அரசு பின்னர் வழங்கிய உறுதி மொழியையும் அவமதிப்பதாகும்" என அன்ரன் பாலசிங்கம் கூறியிருப்பது இதற்கோர் உதாரணமாகும்.

இவ்விடயத்தில் மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் நிலைப்பாட்டை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு ஏற்றுக்கொண்டமை இச்சந்தர்ப்பத்தில் தற்போதைய சமாதான நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகள் அமைப்புக்குப் பெரும் பின்னடைவாகக் கருதமுடியும். தாம் யுத்த ரீதியாக ஸ்ரீலங்கா இராணுவத்தைத் தோற்கடித்து யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவோம் எனவும், புதிய சகாப்தத்தின் ஆரம்பவிழா யாழ்ப்பாணத்திலேயே கொண்டாடப்படுமெனவும் 1999 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் அமைப்பு தெரிவித்திருந்தது. பின்னர் இராணுவரீதியிலோ அல்லது அரசியல் ரீதியிலோ எவ்வாறாயினும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியே தீருவோம் என 2002ஆம் ஆண்டு மாவீரர் தினக் கொண்டாட்டத்தின்போது லண்டன் நகரில் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தமை, விடுதலைப் புலிகள் அமைப்பு யாழ்ப்பாணத்தை தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் அவர்களது நோக்கத்துக்கு அவர்கள் அளிக்கும் முன்னுரிமையை வெளிப்படுத்துகிறது.

சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டுமாயின் அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சினை மிகவிரைவில் தீர்த்து உண்மையே. இவ்வகை தீர்மானத்துக்கு சிங்கள மக்களில் பெரும்பாலானோர் ஆதரவு அளிப்பார்களா? என சிந்திப்பதும் சிரமமானதே.

இவ்விதமாக ஜனாதிபதியின் நிலைப்பாட்டுக்கு எதிராக அரசு மோத முற்பட்டால் அரசு மக்களிடையே செல்வாக்கை இழக்கக்கூடும். இத்தகைய அபிப்பிராய பேதங்கள் நீடித்துச் செல்வதால், பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பை (சிலசமயம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சையும்) தன் வசம் எடுத்துக்கொள்ளவோ அல்லது அமைச்சரவையைக் கலைத்து (நாடாளுமன்றத்தை கலைப்பதைத் தவிர்த்து) புதிய அமைச்சரையும், அமைச்சரவையையும் நியமனம் செய்வதற்கும் ஜனாதிபதி நடவடிக்கை மேற்கொள்ள இடமுண்டு. சமாதான முயற்சிகளில் பங்குபற்றும் மற்றைய தரப்புக்கு (அரசுக்கு) எவ்வளவு பாதிப்புக்கள் ஏற்பட்டாலும் பாதிப்படைந்தாலும், தமது நிலைப்பாட்டினை மாற்றிக்கொள்வதற்கு விடுதலைப் புலிகள் அமைப்பு இணங்குமென நினைப்பது சிரமமானதே. எனவே, ஸ்ரீலங்கா இராணுவத்தின் நிலைப்பாட்டை மாற்றிக்கொள்வதற்கு இராணுவ அதிகாரிகளை இணங்கச் செய்வதே அரசுக்குத் தற்போதுள்ள ஒரே மாற்றுவழியாகும். அரச தரப்பைச் சேர்ந்த ஒரு பகுதியினர் இவ்வகையான முடிவொன்றினை எட்டுவதற்காக கடந்த சில நாள்களாக முயன்று வருவதாக ஊடகச் செய்திகள்மூலம் அனுமானிக்க முடிகிறது. இம்முயற்சியின் வெற்றி தோல்வி பற்றி எதிர்வரும் நாள்களிலோ அல்லது வாரங்களிலோ விவரம் தெரியவரும்.

இவ்விடயத்தில் அரசு மேற்கொள்ளத்தக்க வேறொரு நடவடிக்கையும் உண்டு. யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு மூலம் தமது இராணுவத் தரப்பின் நிலைப்பாட்டை உறுதிசெய்து கொள்ளுதலே அந்நடவடிக்கை. அடுத்த சுற்றுப் பேச்சுக்களின்போது இப்பிரச்சினை தொடர்பாக அரசும், நோர்வே நடுநிலையாளர்களும் நேரடியாக ஒரு நிலைப்பாட்டை எட்டினால், அதனால் விடுதலைப் புலிகள் அமைப்பு மிகுந்த சிக்கலான நிலைக்கு உட்படும். தற்போதைய சமாதான நடவடிக்கைகள் ஊடாக விடுதலைப் புலிகள் அமைப்பு இரு குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ள எண்ணுகின்றது. தாம் ஒரு பயங்கரவாத அமைப்பினர் என்ற பேரைப்போக்கி தேசிய விடுதலை அமைப்பினர் என்ற விதத்தில் சர்வதேச சமூகத்தால் கண்காணிக்கப்படும நிலையை உருவாக்குதல் முதலாவது. வடக்கு - கிழக்கு பகுதிகளினின்றும் இராணுவத்தை முற்றுமுழுதாகவோ அல்லது ஓரளவோ விலக்கிக்கொள்ள செய்தல் இரண்டாவது. இப்பிரச்சினையில் அரசு வழக்கம்போலன்றி விடுதலைப் புலிகள் அமைப்பின் வேண்டுகோளுக்கு இணங்காது கடும் நிலைப்பாட்டை கடைப்பிடிக்குமேயானால், அதன் மூலம் தமது இரு அடிப்படைக் குறிக கோள்களையும் அநந்யோன்னிய ரீதியில் பகிஷ்கரிப்பை (Mutnally Exclusive) (தற்காலிகமாகவேனும்) விடுதலைப் புலிகள் மேற்கொள்ளக் கூடும். ஆனாலும், இவ்வாறானதொரு நிலையில் விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்ந்தும் தமது நிலைப்பாட்டில் கடும்போக்கை கடைப்பிடிப்பார்களானால் அவர்களது செயல் சர்வதேச சமூகத்தின் அதிருப்திக்கு உள்ளாகும்.

சர்வதேச சமூகம் (அதாவது அமெரிக்காவின் தலைமையிலான பலம் வாய்ந்த மேலை நாடுகள்) போடும் தாளத்துக்கு விடுதலைப் புலிகள் நடனமாட தயாராய் இல்லை. பயங்கரவாதத்தையும் ஆயுதப் போராட்டத்தையும் கைவிடுவதாகப் பகிரங்கமாக தெரிவிக்குமாறு ரிச்சர்ட் ஆம்ரேஜ் விடுத்த வேண்டுகோளுக்கு அன்ரன் பாலசிங்கம் பகிரங்கமாக மறுப்பு தெரிவித்ததிலிருந்து இது உறுதியாகிறது. இருந்தபோதும், சர்வதேச ரீதியில் தம் அமைப்பின் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்கச்செய்வதற்கான தேவை விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு உண்டு. அதில் அடங்கியுள்ள அரசியல் மற்றும் பிரசார முக்கியத்துவத்தைப் போன்றே, தற்போது தடைசெய்யப்பட்ட நிலையில் உள்ள தமது சர்வதேச வங்கிக் கணக்குகளில் வைப்புச்செய்யப்பட்டுள்ள நான்கு பில்லியன் அமெரிக்க டொலர் பணத்தை மீளப்பெற்றுக் கொள்வதற்கான கடுமையான, அவசர தேவையும் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்ட இந்த ஓராண்டு காலத்துள் அரசியல் மற்றும் யுத்த ரீதியாகவும் தமது பலத்தைப் பெருக்கிக் கொள்வதில் விடுதலைப் புலிகள் அமைப்பு வெற்றி பெற்றுள்ளது. ஆனால், இக்கால இடைவெளியில் ஸ்ரீலங்காவின் அரசியல் மற்றும் யுத்த நடவடிக்கைகள் பலமற்றுப் போயுள்ளன. இயல்பு வாழ்க்கை பற்றி எவ்வளவுதான் பேசிக்கொண்ட போதும், நாட்டின் நன்மைக்காக இணைந்து செயற்படுவதற்கு ஐ.தே. முன்னணிக்கோ அல்லது பொ.ஐ. முன்னணிக்கோ தேவை ஏற்படவில்லை. போர்நிறுத்தம்மூலம் கிடைத்த அவகாசத்தைப் பயன்படுத்திப், போர் வலுவை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அரசு எவ்வித ஆர்வமும் காட்டவில்லை. உளவலு ரீதியில் விடுதலைப் புலிகள் அமைப்பு கடந்த ஓராண்டுகால இடைவெளியில் தமது பலத்தை இரு மடங்காகவோ அல்லது மும்மடங்காகவோ பெருக்கிக் கொண்டுள்ளனர். ஆனால், ஸ்ரீலங்காவில் உதாசீனப்படுத்தும், தோல்வியளிக்கும் மனப்போக்கையே காணமுடிகிறது.

இத்தகைய நிலையில் ஸ்ரீ.ல.சு. கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையே நெருக்கமான உறவை ஏற்படுத்த முயல்வது இயற்கையே. அவ்விதமான நெருக்கம் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சியை தோற்கடிப்பதற்கு பெரும் வழிவகுக்கும். அரசு அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சினையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் கோரிக்கைக்கு இணங்குமானால் அது ஸ்ரீ.ல.சு.கட்சி-ஜே.வி.பி. ஆகியவற்றுக்கிடையேயான நெருக்கம் அபிவிருத்தி அடையவும், அக்கூட்டமைப்பை பலமடையச் செய்யவும் தேவையான பின்னணியை உருவாக்கும். இதன் பலனாகத் தற்போதைய அரச எதிர்ப்பு நடவடிக்கைகள் மேலும் தீவிரமடையும். ஸ்ரீ.ல.சு. கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையேயான - நாட்டைப் பிரிப்பது தொடர்பாக - எதிர்ப்பு முயற்சிகள் பலம் பெற்றால் அது பிரதமர் ரணிலின் அரசின் செயற்பாடுகளைப் பலவீனமடையச் செய்யும் நிச்சயமற்ற நிலைமை உருவாகும். அதன் பயனாக யுத்தநிறுத்தம் மேலும் சில நாள்களுக்குப் பேணப்படுவதற்கு விடுதலைப் புலிகள் அமைப்புக்கு அவசியம் ஏற்படுவதுடன், அரசின் இக்கட்டு நிலையும் மேலும் அதிகரிக்கும். அரசு விடுதலைப் புலிகளின் தாளத்துக்கு ஆட முயன்றால் ஜே.வி.பி - ஸ்ரீ.ல.சு. கட்சியின் கூட்டமைப்பின் பலம் மேலும் அதிகரிகும். இக்காரணங்களால் நாட்டினதும், பொதுமக்களதும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகும். இருப்பினும், இந்நாட்டின் அரசியல்வாதிகள் கட்சிபேதமின்றி இவ்விடயத்திற்கு முன்னுரிமை அளிப்பார்கள் எனச் சிந்திப்பது கடினமானதாகும்.

ஸ்ரீ.ல.சு.கட்சி - ஜே.வி.பி. கூட்டமைப்பின்மூலம் ஜே.வி.பியினர் கடும்போக்கானவர்கள் எனக் (தற்காலிகமாகவோ) கணிக்கப்படுவார்களானால் அது இந்நாட்டின் ஜனநாயக முறைக்கு வாய்ப்பாக அமையும். ஆனால், இக்கூட்டின் மூலம் ஸ்ரீ.ல.சு.

**தமிழில்: வியெஸ்ரி**

கட்சியைக் கடும் சிங்கள பௌத்த இனவாத நிலைப்பாட்டுக்குக் கொண்டு செல்லுமானால் பிளவுறாத நாடாக இந்நாட்டைப் பாதுகாக்க முடியாத நிலை ஸ்ரீ.ல.சு.கட்சிக்கு உருவாகும். இன்று நாடு எதிர்நோக்கும் சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டுமாயின் ஜாதிமத பேதமற்ற, ஜனநாயக ரீதியிலான கட்சியாக ஸ்ரீ.ல.சு.கட்சி இயங்கியாக வேண்டும். சிங்கள மற்றும் முஸ்லிம் இனங்களுக்கிடையேயான மோதல்கள் போன்று சிங்கள பௌத்தர்களையும் பௌத்தர் அல்லாதோரையும் மோதவைப்பதால் பயனடைவது விடுதலைப் புலிகள் அமைப்பே என்பதை உணர்ந்து கொள்வதற்கு பெரிய அறிவாளியாக இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. அது போன்றே விடுதலைப் புலிகள் மேலுள்ள விரோதத்தைக் காட்டுவதற்கு தமிழ் மக்களை விரோதித்துக் கொள்வது கடைசியில் துன்பியலுக்கே வழிவகுக்கும் என்பதிலும் சந்தேகமில்லை. நீறுபூத்த நெருப்புப்போல் சமூகத்தின் ஜாதி, மத பேதங்களை வளர்ப்பதற்கு எவராவது சிரத்தை எடுத்துச் செயற்படுவார்களானால் அது கடைசியில் சிங்கள பௌத்தத்துக்கு அழிவை ஏற்படுத்தும் தீச்சுவாலையாக அமையும்.

ஸ்ரீ.ல.சு.கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டு நாட்டுக்கு நன்மையான விதத்தில் பயனளிக்க வேணடுமானால் அது நாடு பிளவுபடுவதற்கும் எதிரான முயற்சியாயிருக்க வேண்டுமேயன்றி, அதிகாரப் பகிர்விற்கு எதிரான முயற்சிகளாய் அமையாதிருப்பதற்கு வழிவகை செய்யப்பட வேண்டும். அவ்வாறே ஜனநாயக ரீதியான தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளை நியமித்தலூடாக ஒற்றுமையை வலுவாக்க வேண்டும். இல்லையேல் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆதரவான அரசும், இனவாத, மதவாத எதிரணியும் அமைய நேரிடும்.

நாட்டு மக்களது பொருளாதார நிலை கருத்தில் கொள்ளப்படவேணடிய மற்றொரு முக்கிய விடயமாகும். ஐ.தே.கட்சி அரசினால் தமக்கு ஏதாவது பொருளாதார சுபீட்சம் கிடைக்குமென 2002ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பொது மக்கள் மத்தியில் உருவாகியிருந்த எதிர்பார்ப்பு வழமைபோலவே பகற்கனவாகிவிட்டது. பொதுமக்களின் வாழ்க்கைச் சுமையை அகற்றவோ அன்றேல் இலேசாக்கவோ அரசு திட்டமிடவோ அல்லது நடவடிக்கை மேற்கொள்ளவோ முயலவில்லை என்பது தெளிவாகும். அதற்கீடாக தொழிலாளர் வர்க்கத்தினரின் சில உரிமைகளை உறுதிப்படுத்தும் சில சட்டங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசு முயற்சிசெய்து வருகிறது. இசசட்டமூலங்களை நிறைவேற்றும் நோககில் 2001ஆம் ஆண்டில் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாடு காண்பதற்கான ஒப்பந்தம் பொ.ஐ.முன்னணி அரசினாலேயே மேற்கொள்ளப்பட்டது என்பது வெளிப்படை. ஆனால், இந்த உண்மையை ஐ.தே.முன்னணியால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. இச்சட்டமூலத்துக்கு எதிரான நடவடிக்கைகளைத் தாம் ஆரம்பித்திருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் தற்போதும் தெரிவித்துள்ளார்.

இவ்வகையில் 2003ஆம் ஆண்டிலும் அரசின் குழம்பிய பொருளாதாரம் மற்றும் அரசியல் முன்னெடுப்புக்கள் ஆகியவற்றில் மாற்றம் ஏற்படுத்தப்படாவிட்டால், அது ஜாதிபேதம் மற்றும மத பேதங்களை வளர்ச்சியுறச் செய்யும் முயற்சிகளாய் அமையும். அதனால் நாடு பூராவும் பலதரப்பட்ட பிரிவினைகள் வளர்ச்சியடைவதோடு, பல்கிப் பெருகுவதற்கும் இடமேற்படும். இன்று எமது சமூகம் முழுமையிலும் பரவியிருக்கும் வன்முறைகளை நோக்கும்போது அவ்வாறான வளர்ச்சி பெரிய அளவிலான நாசத்தை ஏற்படுத்துமென அனுமானித்தல் சிரமமல்ல.

நாட்டின் முக்கிய இரு கட்சிகளும் நாட்டினதும் பொதுமக்களினதும் தேவைகளை பாதுகாப்பதோடு அதற்கான பொறுப்புள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இயல்பு வாழ்க்கையை கட்டிக்காப்பது இவ்விதமான நிலைமையை தவிர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கையாய் அமையும். உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை ஊடாக இதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கமுடியும். 2003ஆம் ஆண்டு நாட்டுமக்களது வாழ்வுக்கு நன்மை அளிக்குமா அன்றேல் தீமையளிக்குமா எனத் தீர்மானிப்பது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் அவசியமான இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதற்கு, அரசு மற்றும் எதிரணி தலைமைத்துவங்கள் வெளிப்படுத்தும் விருப்பு வெறுப்புக்களை கொண்டே தீர்மானிக்க இயலும். ✦



கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் சங்கானை பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்பட்டுவரும் தையல் பயிற்சி நிலையத்தை சங்கானை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இ. சச்சிதானந்தன் நாடாவைவெட்டி திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். (எ-29)

## வெளிவந்துவிட்டது!

சுபானு(2003 - 2004) புதுவருட

## திருக்கணித பஞ்சாங்கம்

வழமையான அம்சங்களுடன்
தினசரி கிரகஸ்புடங்களும்
தினமும் குறித்த நேரத்திற்கு
இலக்கினம் காணும் பதகமும்
சேர்க்கப்பட்டுள்ளன.

*விவரங்களுக்கு:*
திருக்கணித நிலையம்,
மட்டுவில், சாவகச்சேரி.

(13791)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 18 - 05 - 1917

மறைவு 28 - 12 - 2002

### திருமதி கோவிந்தபிள்ளை செல்லம்மா

அன்பினால் எமையெல்லாம்
உம் சிறகால் அரவணைத்தீர்
ஆறவில்லை எம் இதயம்
மாதம் ஒன்று சென்றாலும்
எமதில்லத்தில் நீரென்றும்
பௌர்ணமியாய் ஒளிர்கின்றீர்
இன்றைய நாளில் உமது ஆத்மசாந்திக்காய்
இறைவனை இறைஞ்சுகின்றோம!
*ஓம் சாந்தி!*

திருமதி தி.மகேஸ்வரி
*(மகள் - இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை, வட - மத்திய மகளிர் கல்லூரி),*
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*திகிரி,*
*புலோலி கிழக்கு,*
*பருத்தித்துறை.*

(13788)

## கற்றல் உபகரணம் அன்பளிப்பு

வடமராட்சி,ஜன.28

பருத்தித்துறை கிறிஸ்தவ இளைஞர் ஒன்றியம் குடத்தனைப் பகுதியைச் சேர்ந்த சுமார் 25 மாணவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல்-உபகரணங்களை வழங்கியுள்ளனர்.

குடத்தனை தென்னிந்தியத் திருச்சபை தேவாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் வைத்து இளைஞர் ஒன்றியத் தலைவர் அருள்திரு.எஸ். சதீஷ் இற்றை மாணவர்களுக்கு வழங்கினார்.

(எ-173)

## பாலம் பலத்த சேதம்

வரணி,ஜன.28

வரணி - குடத்தனை பிரதான வீதியிலுள்ள பாலம் பலத்த சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது.

பாதசாரிகள் மற்றும் வாகனங்கள் பயணஞ்செய்யமுடியாத அளவுக்கு குறித்த பாலம் சேதமடைந்துள்ளதாகவும் -

இரவுவேளைகளில், இந்த வீதியினூடாக பயணஞ்செய்வோர் பாலத்தினுள் விழுந்து விபத்துக்குள்ளாகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும் - கூறப்பட்டது.

(எ-170)

## பயிற்சிநெறிக்கு விண்ணப்பம்

வடமராட்சி,ஜன.28

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச இளைஞர் கழகச் சம்மேளனததினால் நடத்தப்படும் தட்டச்சு, தையல், கேக் ஐசிங், பூவேலை, தலையலங்காரம் போன்ற பயிற்சிநெறிகளின் புதிய் பிரிவுகள் எதிர் வரும் முதலாம் திகதிமுதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சிநெறி வகுப்புகளில் கலந்துகொண்டு பயிற்சிகளை தொடர விரும்புவோர் கரவெட்டி, சாமியன் அரசடி, பருத்தித்துறை, அத்தியடி ஆகிய இடங்களிலுள்ள பிரதேச இளைஞர் சம்மேளன அலுவலகங்களில் விண்ணப்பங்களை ஒப்படைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-173)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இணுவில் மேற்கு J/191
கிராம உத்தியோகத்தர்

### திரு. கந்தையா இரவீந்திரன்

அவர்கள் கிராம உத்தியோகத்தர் தரம்I இற்குப் பதவியுயர்வு பெற்றுக்கொண்டதையிட்டு எமது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவிப்பதோடு, அவர் செகராஜசேகரப் பிள்ளையாரின் திருவருளால் மேலும் பல பதவிகளையும் சிறப்புக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

இணுவில் மேற்கு(J/191)
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரும்,
மக்களும்.

(13790)

## யாழ்ப்பாணம் - மாநகரசபை
## கேள்வி அறிவித்தல்

கீழ்க்காணும் இறைச்சிக்கடையை 01.02.2003 முதல் 31.12.2003 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்படிவம் வழங்கும் இறுதித் திகதி:- 31.01.2003ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிவரை.

கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி:- 31.01.2003ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.2 மணிவரை.

கேள்விகள் திறக்கும் திகதி:- 31.01.2003ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.2.30 மணிக்கு.

| விவரம் | கேள்விப் பிணைப்பணம் | நிர்ணயித்த ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வற் நீங்கலாக) |
|---|---|---|
| புங்கன்குளம் ஆட்டிறைச்சிக் கடை *(புங்கன்குளம் சந்தையில் கடையை குத்தகைக்காரரே அமைத்தல் வேண்டும்)* | 2, 500/= | 16, 500/= |

மேற்படி கேள்வியில் சித்திபெறும் கேள்விக்காரர் 31.01.2003ஆம் திகதி வெள்ளிக்கிழமை குத்தகைப் பணத்தைச் செலுத்தி உடன்படிக்கை செய்யத் தயாராக இருத்தல்வேண்டும். மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2003.01.27.

(C/26251)

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.


## சுடர் ஒளி




விலை 14/=

27 - 01 - 2003 இதழில்

☆ தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை அரங்கேற்றிய பொங்குதமிழ் பேரெழுச்சி

☆ கட்டவிழும் வக்கிரங்களும் பகிடிவதை உக்கிரங்களும்

☆ ஆட்டம் கண்ட அமுதத்தன் நம்பிக்கையும் மகேஸ்வரனின் அதிரடி அறிக்கைகளும்

☆ அலைகடல் அணைப்பில் கோணமாமலை அமர்ந்த திருக்கோணேஸ்வரப் பெருமான்

☆ அழிவுகள் தந்திட்ட கறையும் விடிவென்ற பெயரில் மறைவும்

☆ அளவெட்டியில் உளவு விமானத்துக்கு என்ன வேலை?

மற்றும் சினிமா, விளையாட்டு, இணையத்தளங்களிலிருந்து, பித்தன் பதில்கள், க்ரைம் உட்பட பல்வேறு ஆக்கங்கள்

(C-26249)

# உலக இந்து மாநாட்டுக்கு அமைப்புகள் பலவும் ஆதரவு

**2ஆவது உலக இந்து மாநாட்டின் முன்னோடி வேலைத்திட்டங்கள் குறித்து மாநாட்டுச் செயலர் பேராசிரியர் எஸ்.பத்மநாதன் விடுத்துள்ள செய்திக் குறிப்பு இங்கு பிரசுரமாகிறது.**

இந்துசமய விவகார அலுவல்கள அமைச்சின் ஏற்பாட்டில் மே மாதம் 2ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ள உலக இந்து மாநாட்டிற்கு ஆதரவு பெருகி வருகின்றது. ஆரம்பத்திலிருந்தே அகில இலங்கை இந்து மாமன்றம், கொழும்பு இராகிருஷ்ணமிஷன், கொழும்பு விவேகானந்த சபை போன்ற பிரபலமான சமய நிறுவனங்கள் இம் மாநாட்டிற்கு பூரண ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்கி வருகின்றன.

மாநாட்டுப் பணிகளின் பிரதான பொறுப்புக்களை இந்துசமய நிறுவனங்களைச் சார்ந்தோர் ஏற்றுக் கொண்டுள்ளனர். இலங்கை இந்துப் பேரவை, சனாதன தர்மயுவ விழிப்புணர்ச்சி கழகம் முதலியன தாமாகவே முன்வந்து மாநாட்டுப் பொறுப்புக்களிற் பங்கேற்றுக் கொண்டுள்ளன. நாடளாவிய ரீதியில் இலங்கையில் வாழும் இந்துக்களும் சமயாபிமானிகளும், இந்துசமய நிறுவனங்களும் வேற்றுமைகளை மறந்து, இம் மாநாடு தொடர்பான நிகழ்ச்சிகளிலே பங்கேற்று இந்து சமுதாயத்தை மேனமைப்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் உறுதிபூண்டுள்ளனர்.

இம்மாநாட்டிற்கென மிகக் கூடுதலான பேராளர்கள், பார்வையாளர்கள் விண்ணப்பங்கள் தமிழகத்திலிருந்து கிடைத்துள்ளன. வட இந்தியாவிலிருந்தும், பிற தேசங்களில் இருந்தும் பெருமளவிலான பேராளர்கள், பார்வையாளர்கள் வரவுள்ளனர்.

பெங்களூரிலிருந்தும், வட இந்தியாவிலிருந்தும் தமிழகத்திலிருந்தும் உன்னதமான கலைஞர்களை வரவழைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொளளப்படுகின்றன. அவர்களில் சிலர் தாமாகவே பங்குகொள்ள முன்வந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. வேதனமின்றி நிகழ்ச்சிகளை அரங்கேற்றுவதற்கும் அவர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

இம் மாநாடு இந்து விவகார அலுவல்கள் அமைச்சினால் நடத்தப்படுகின்றபோதிலும், உண்மையில் அமைச்சின் தலைமையில் இலங்கையில் வாழும் இந்து சமுதாயத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பொது மன்றங்களும் நிறுவனங்களும் பொறுப்பேற்றுப் பங்குகொண்டு நடத்தவிருக்கும் மாநாடாக உருமாறியுள்ளது. பல நிகழ்ச்சிகளை பொறுப்பேற்று தாமே ஒழுங்கு செய்து அவற்றின் செலவினங்களை ஏற்கவும் இந்நிறுவனங்களும் தனிநபர்களும் முன்வந்துள்ளனர்.

கொழும்பிலுள்ள இந்து இளைஞர் சங்கமொன்று வெளிநாடுகளிலிருந்து வரவுள்ள பேராளர்கள், பார்வையாளர்கள் என்போரில் 50பேரை விமான நிலையத்திலிருந்து அழைத்து வருவதிலிருந்து திரும்பிச் செல்லும் வரை அவர்களுக்கு வேண்டிய எல்லா விதமான தேவைகளையும், வசதிகளையும் வழங்க முன்வந்துள்ளன.

அதேசமயம், இளைஞர் மாநாடு நடைபெறும் தினத்தில் அன்றைய மாநாட்டுச் செலவினங்கள் அனைத்தையும் அவர்கள் பொறுப்பேற்பதாகவும் உத்தரவாதம் அளித்துள்ளனர். அவர்களுக்கு இதனால் எட்டு லட்சம்முதல் பத்து லட்சம் ரூபாவரை செலவு ஏற்படும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, வவுனியா, கண்டி, யாழ்ப்பாணம், திருகோணமலை, பதுளை முதலிய பிரதான நகரங்களிலும் பிராந்திய ரீதியில் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. அங்கு செயற்படும் குழுக்கள் சுதந்திரமாக எதுவித கட்டுப்பாடுமின்றி இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு ஆரம்பச் செலவினங்களுக்கு இயன்ற பணத்தை வழங்கவுள்ளது. தேவையான மிகுதிப் பணத்தை பிரதேசத்திலுள்ள குழுக்கள் சேர்த்துக்கொண்டு தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளன.

கொழும்பில் சிறப்பாக நடைபெறவுள்ள மாநாடும், பிராந்திய ரீதியில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகளும் இலங்கைவாழ் இந்து மக்களிடையே ஒரு புத்துணர்வையும், மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தும் என்பது அமைசசின் எதிர்பார்ப்பாகும் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

# வலி. தென்மேற்குப் பிரிவுக்கு தனியான விவசாயப் போதனாசிரியரை நியமிக்குக!

## சம்மேளனம் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை

சண்டிலிப்பாய்,ஜன.28

சண்டிலிப்பாய் (வலி. தென்மேற்கு) பிரதேச செயலர் பிரிவுக்கென விவசாயப் போதனாசிரியர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்று சண்டிலிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் விவசாயத் திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தற்போது வலி. வடக்கு கீரிமலை கமநலசேவை கேந்திர நிலையப் பிரிவுக்கான விவசாயப் போதனாசிரியரே சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குமான விவசாயப் போதனாசிரியராகவும் கடமையாற்றி வருகின்றார்.

இரு பிரதேசங்களுக்குமாக இவர் சேவையாற்றி வருவதால் விவசாயிகளுக்கான சேவைகளை முற்றுமுழுதாகப் பெறமுடியாத நிலை நிலவுகின்றது.

ஆகவே, விரைவில் இப்பிரதேச செயலகப் பிரிவுக்கென விவசாய போதனாசிரியர் ஒருவரை நியமனம் செய்துதருமாறு வேண்டுகின்றோம் - என்று அவர்கள் தமது வேண்டுகோள கடிதத்தில் கோரியுள்ளனர்.

இதன் பிரதி சண்டிலிப்பாய்(வலி. தென்மேற்கு) பிரதேச செயலருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(எ-135)

# விதை நெல்லுக்கு விண்ணப்பம்: நேர காலத்துடன் அனுப்புக!

## விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்

வலிகாமம் தெற்கு,ஜன.28

இந்த வருடத்தின் பெரும்போகத்துக்கான தரமான விதை நெல்லைப் பெறவிரும்பும் விவசாயிகள், நெல் அறுவடையாகியுள்ள தற்போதைய சூழலிலேயே - உடனடியாக - தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்க வேண்டுமென கீரிமலை கமநல சேவை நிலைய பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திருமதி பரமேஸ்வரி மணிவண்ணன் அறிவித்துள்ளார்.

தமது விண்ணப்பத்தில் தேவையான விதை நெல்லின் இனம், அளவு போன்றவற்றையும் தெளிவாக குறிப்பிடவேண்டுமெனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

நெல் விதைப்பதற்கு சிலகாலத்துக்கு முன் விதை நெல்லுக்காக விண்ணப்பம் செய்வதால் பல விவசாயிகளுக்கு அவர்கள் விரும்பும் விதை நெல்லை வழங்க முடியாத நிலை ஏற்படுகிறது. அறுவடைக் காலத்தில் விண்ணப்பத்தை அனுப்பினால் நாமும் போதியளவு நல்லின விதை நெல்லை பெற்றுவைத்து வழங்கமுடியும் - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஜ-152)

# தென்னை மீள்நடுகையின் அவசியம்

தென்னை இலங்கையின் தேசிய வருமானத்தை ஈட்டும் பயிராக, பாதுகாத்துப் பயன்பெற்றுவரும் ஒரு பணப் பயிராகக் கணிக்கப்பட்டு வருகின்றது. இப்பயிரும் 'பாம்' குடும்பப் பயிராக இருந்து பனையின் பயன்போல அடியிலிருந்து நுனிவரையும் மனித வாழ்வுக்குப் பயன்படுத்த உதவும் பொருள்களை ஈயும் விருட்சமாக எமக்குக் காட்சிதரும் ஒரு பணப் பயிராகும்.

உலகில் ஆசியாக் கண்டத்தில் கூடுதலாகக் காணப்படும் இவ்வளம், இலங்கையில் 4,51,486 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் கிட்டத்தட்ட 6,77,432 லட்சம் தென்னைகள் காணப்படுவதாகவும் இதன் ஏற்றுமதிப் பொருள்கள் மூலம் இலங்கை அரசு மொத்தத் தேசிய வருமானத்தில் கணிசமான தொகையைப் பெற்று வருவதையும் அறியமுடிகின்றது.

தமிழர்களின் தாயகமாகக் கருதும் வடக்கு - கிழக்கு மாகாணப் பாரம்பரிய தமிழ்பேசும் மக்கள் குடிவாழ் நிலப்பரப்பில் 16 ஆயிரத்து 692 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் 27.12 லட்சம் தென்னை மரங்கள் இருந்ததாக விவசாய மதிப்பீடு - 1982 தெரிவிக்கின்றது. இவ்வளமானது, வட கிழக்கு மாகாணத்திற்கு ஒரு பணப் பயிராகவும், ஒவ்வொரு தமிழர் வீட்டிலும் உணவு உட்பட பயன்பாட்டுப் பொருள் வழங்கும் வளமாகவும் கருதப்பட்டு, தென்னம்பண்ணைகளுக்கும் மேலாக ஒவ்வொரு குடியிருப்பு நிலங்களிலும் பயிரிட்டு வளர்த்துவரும் வழக்கமாகிவிட்ட தொன்றாகும்.

ஆடி மாதத்தில் சிறந்த விதைத் தேங்காய்களைத் தேர்ந்தெடுத்து பாத்தி அமைத்து, முளைவிடச் செய்து, தென்னம்பிள்ளைகளாக 2 அடி அகலம் 2அடி ஆழம் 2அடி நீளம் கொண்ட குழிகளை தொற்றுநீக்கி, பசளையிட்டு ஒரு ஏக்கருக்கு 60-65 பிள்ளைகள் என்னும் விகிதத்தில் சராசரி 20அடி தொடக்கம் 25அடி இடைவெளி கொண்டு நடுகை செய்வது வழக்கத்தில் நடைபெறுவதாகும். முறையான நீர்ப்பாசனமூலம் வளர்க்கப்படுவதால் 6 வருடங்களின் பயன்தரும் விருட்சங்களாக நாம் அதன் பயனை அனுபவிக்கத் தொடங்கலாம்.

இவ்வளத்தின் மூலம் தேங்காய், கொப்பறா, எண்ணெய், பிண்ணாக்கு, சிரட்டைக்கரி, மரப் பொருள்கள், ஈர்க்கு உற்பத்திகள், ஓலை, எரிபொருளாக மட்டை, தும்பு உற்பத்திகள் பலவும், சாற்று உற்பத்திகளான கள், சாராயம, தென்னம் பதநீர், வெல்லம் என்பவற்றை வருடம் முழுவதுமே வருமானப் பொருள்களாகப் பெறக்கூடிய தான ஒரு விருட்சமாக எமது மண்ணில் காணப்படுகின்றது.

மேற்குறித்த வருமானப் பொருள்களில் ஒரு சிலவற்றின் வருமானக் கணிப்பீட்டினை அவதானிப்போம் ஒரு தென்னை நடுகை செய்து 5 வருடத்தின் பின் வருடாந்தம் குறைந்தது 80 தேங்காய்களைத் தரும். எனவே ஒரு ஏக்கரில் 80X60=4800 தேங்காய்கள் கிடைக்கும்.

ஒரு தேங்காய் ரூ.10/- எனில் 4800இற்கும் ரூபா, 48000/- எனவே மாத வருமானம் - 4000/-

ஒரு தென்னை ஒரு வருடம் 12 ஓலை தருமெனில் ஒரு ஏக்கரில் 12x60 தென்னை 720 ஓலைகள் கிடைக்கும்.

ஒரு ஓலை ரூ.8/- எனில் 8X720 - ரூபா 5 ஆயிரத்து 760 எனவே மாத வருமானம் 480/-

எனவே, ஒரு ஏக்கர் தென்னை மூலம் மாத வருமானமாக இரு பொருளகளில் மட்டும் ரூபா, 4480/- பெற முடிகின்றது. எனில் ஏனைய பொருள்களை (பொச்சு, மட்டை, சிரட்டை) திட்டமிட்டுப் பயன்படுத்தின் ஒரு ஏக்கர் மூலம் மாத வருமானமாக ரூ.5000/- பெறமுடியும். அத்துடன் பலருக்கு சுயதொழில் முயற்சிக்கான வாய்ப்பையும் வழங்க முடியும்.

எமது வடகிழக்கு மாகாண நிலப்பரப்பில் உள்ள தென்னை வளத்தை திட்டமிட்டுப் பயன்படுத்தப்படுமாயின் எமது சுயதேவைகளுக்கான தன்னிறைவை அடைவதுடன், அந்நிய செலாவணியை மீதப்படுத்தி ஏற்றுமதிப் பொருள்களை உற்பத்தி செய்து பொருளாதார மேம்பாட்டுக்கு வழிசெயயக்கூடிய வாய்ப்பு இவ்வளத்தின் மூலம் நிறைய உருவாக்கமுடியும்.

பனையும், தென்னையும் வட கிழக்கின் தமிழர் பாரம்பரிய பூமியின் தேசிய விருட்சங்களாகவும், தேசிய பொருளாதாரவிருத்தியினை ஈட்டக்கூடிய வளங்களாகவும் காணப்படுவது எமக்குக் கிடைத்த பெரும் அதிர்ஷ்டமாகக் கொள்ளலாம்.

இந்நிலையில்தான் கடந்த பல வருடங்களாக வடக்கு - கிழக்கு மாகாண நிலப்பரப்பில் நடைபெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளின் விளைவால் எமது வளம்மிக்க நிலம் அழிக்கப்பட்டுள்ளது. இதனால், நிலத்தின் வளங்களான பயன்மிக்க விருட்சங்கள் இல்லாதொழிந்துள்ளது. அவற்றுள் பனை, தென்னை வளங்களின் அழிவென்பது நீண்டகால பொருளாதார பின்னடைவை எமக்கு ஏற்படுத்தியுள்ளது என்பதை தமிழர்கள் நன்கு உணர்ந்துகொள்ளல் வேண்டும்.

குறிப்பாக, ஏ-9 பாதை திறக்கப்பட்டதும் அப்பாதையினூடாகப் பிரயாணஞ்செய்யும் ஒவ்வொருவரும் எமது வள அழிப்பின் மிக உயர்ந்த நிலையை தென்மராட்சிப் பிரதேசமெங்கும் பல்லாயிரக் கணக்கில் தலையின்றி நிமிர்ந்து நிற்கும் தென்னை மரங்களைப் பார்ப்பதன் மூலம் உணர்ந்துகொள்ளமுடியும். தமிழரின் நிலத்தில் நிற்பதால் தலை இல்லாவிடினும் நிமிர்ந்து நிற்கும் வயிரத்தை உள்ளத்தில் கொண்டு நிற்பது போன்ற உணர்வையே எமக்கு ஏற்படுத்துகின்றது. இவ்வளங்களின் அழிவு எமக்கு எவ்வாறான பொருளாதாரத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது அவதானிக்கப்பட வேண்டியதொன்றாகும்.



தமிழர் தாயக நிலமாகிய வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 27.12 லட்சம் தென்னை மரங்களில் அண்ணளவாக ஆறு லட்சம் தென்னை மரங்கள் இராணுவ நடவடிக்கைகளால் அழிக்கப்பட்டதாக அறிய முடிகின்றது. ஆறு லட்சம் தென்னை மரங்கள் என்னும் போது அவை பத்தாயிரம் ஏக்கர் நிலத்தில் நடுகை செய்யப்பட்டதாக கருத வேண்டியுள்ளது. எனவே, வட கிழக்கில் நாற்பத்தோராயிரத்து எழுநூற்று முப்பது ஏக்கரில் இருந்த தென்னை வளம் இன்று முப்பத்தோராயிரத்து எழுநூற்று முப்பது ஏக்கரில் உள்ள தென்னைவள தொகையாக மாற்றம் கண்டுள்ளமை பற்றி நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

இந்நிலையில் ஒரு ஏக்கரில் மாத வருமானமாக ரூபா ஐயாயிரம் தரக்கூடிய தென்னை வளம் பத்தாயிரம் ஏக்கருக்கும் ஐந்து கோடி ரூபா மாதத்தில் இழந்து நிற்கின்றது. எனவே, ஒருவருடத்தில் அறுபது கோடி ரூபாவை எமதுமண், தென்னை வளம் அழிக்கப்பட்டதால் நிரந்தரமாகவே இழந்துவிட்டது என்பது கணக்கியல் ரீதியில் நாம் உணரவேண்டியதுடன் இந்த இழப்பானது ஐந்து வருடத்துக்கு மேல் தொடராது காக்கவேண்டிய பொறுப்பை எமக்கு உணர்த்தி நிற்கின்றது.

இந்நிலையில், தென்னிலங்கையில் தென்னை அபிவிருத்திச்சபை மூலம் வழங்கப்படும் முன்னெடுப்புக்கள் எமக்கும் புறக்கணிப்பில்லாது தென்னை வள அபிவிருத்திக்கு இங்கு கிடைக்க துறைசார் பெரியோர்கள் முயற்சிகளை மேற்கொள்வதுடன், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் ஒவ்வொரு தமிழ் குடும்பங்களும் தலா ஐந்து தென்னம் விருட்சங்களை இந்த ஆண்டிலேயே நடுகை செய்து பராமரிப்பதன் மூலம்


**கி.சிவநேசன்**

*பொதுமுகாமையாளர், வட.மா.பா.தெ.வ.அ.கூ.நிறுவன பேரிணையம், கிளிநொச்சி.*


ஆறு வருடங்களுக்குப் பின்னராயினும் நாம் இழந்த கோடிக் கணக்கான வருமானத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்புக்கிட்டும்.

எனவே, எமது பாரம்பரிய வாழ்விடம் இன்று பாலைவனமாக வரண்டு கிடப்பதற்குக் காரணம், எமது நிலவளம் அழிக்கப்பட்டமையும், அதில் இருந்த பயன்மிகு விருட்சங்கள் அழிக்கப்பட்டமையுமே. இந்நிலையைப் போக்கி நிலவளத்தை முறையாகப் பண்படுத்தி பயன்தரு விருட்சங்களை வளர்த்துப் பெருக்குவதற்கு மீண்டும் புத்துயிர் கொடுப்பதுடன், அவ்வளங்களூடாக ஏற்பட்ட பொருளாதார பின்னடைவுகளையும் போக்குவதற்கும் எமது சுற்றாடல் மாசடையாமல் காத்துக்கொள்வதற்கும் எமது பாரம்பரிய நிலப்பரப்பு மண்ணரிப்பின் மூலம் சிதைவடைந்து போகாது தடுத்துக் கொள்வதற்கும் எமது நிலவள மேம்பாட்டுப் புரட்சியை உடன் ஆரம்பித்து எமது மண்ணை செழிப்புமிக்கதாக புனரமைக்க அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போம்.

*நன்றிஒருவருக்கு செய்தக்கால் - அந்நன்றி*
*என்று தருங்கொல் என வேண்டாம் - நின்று*
*தளரா வளர் தெங்கு தாளுண்ட நீரைத்*
*தலையாலே தான் தருதலால்.*

# கமமும் புலமும்

# 25,000 ரூபா கொடுப்பனவு பெற தேசிய அடையாள அட்டை அவசியம்

## கண்டிப்பான நடைமுறை பற்றி அறிவிப்பு

வலி.மேற்கு,ஜன.28

யாழ்.மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களில் 2 ஆயிரத்து 500 ரூபாவுக்குட்பட்ட வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபா வழங்குவது பற்றி பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு அவசரகால புனரமைப்புத் திட்டத்தின் கீழ் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இந்தக் கொடுப்பனவை வழங்குவது தொடர்பான நடைமுறைகளின்படி கொடுப்பனவைப் பெறும் குடும்பத்தின் பிரதான குடியிருப்பாளர் தேசிய அடையாள அட்டை வைத்திருந்தால் மட்டுமே கொடுப்பனவைப் பெறமுடியும் - என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கொடுப்பனவு பெறவுள்ள குடும்பங்களை பதிவு செய்யும்போது தேசிய அடையாள அட்டை வைத்திருக்காத குடும்பங்களைச் சேர்க்க வேண்டாம் என்று பிரதேச செயலர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் -

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகள் - இடம்பெயர்வுகள் காரணமாகக் குடாநாட்டில் பலரது தேசிய அடையாள அட்டைகள் அழிவடைந்ததுடன், காணாமற் போயிருந்தமை தெரிந்ததே.

குறிப்பாக வன்னிப் பகுதியில் இருந்து வந்து அண்மையில் குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த பலரிடம் தேசிய அடையாள அட்டைகள் இல்லை. அத்துடன் தேசிய அடையாள அட்டையைப் புதிதாகப் பெறுவதற்கான ஆவணங்களும் அவர்களிடம் இல்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

இதனால், வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட இடம்பெயர்ந்த மக்கள் பலர் மீள்குடியமர்வுக் கொடுப்பனவான 25 ஆயிரம் ரூபாவைப் பெறமுடியாத நிலை ஏற்படலாம் என்றும் - சுட்டிக் காட்டப்பட்டது. (ஐ-எ-175-117-76)

# ஊன்றுகோல்கள், கைத்தடிகள் விநியோகிக்க லயன்ஸ் ஏற்பாடு

'இன்னர்' கொழும்பு லயன்ஸ் கழகத்தின் ஊன்றுகோல்களும் கைத்தடிகளும் எதிர்வரும் 3 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் வைத்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவை விநியோகிக்கப்படும் இடம் பின்னர் அறிவிக்கப்படும்.

ஊன்றுகோல்கள், கைத்தடிகள் தேவையானோர் கொழும்பு ஸ்டேஷன் வீதியில் உள்ள 'இன்னர்' கொழும்பு லயன்ஸ் கழகத் தலைவருக்கு விண்ணப்பிக்குமாறு ஏற்கனவே கோரப்பட்டது தெரிந்ததே.

விண்ணப்பிக்கத் தவறியோரின் வசதிகருதி யாழ்ப்பாணம், நல்லூர் - பருத்தித்துறை வீதியில் உள்ள புரமோட்டர்ஸ் என்ஜினியர்ஸ் நிறுவனத்தில் விண்ணப்பங்களை கையளிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 2ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களை புரமோட்டர்ஸ் என்ஜினியர்ஸில் கையளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட இந்த ஊன்றுகோல்களையும் கைத்தடிகளையும் 'இன்னர்' கொழும்பு லயன்ஸ் கழகம் இலவசமாகப் பெற்றிருந்தது. இவையே யாழ்ப்பாணத்தில் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன.

இவை தேவையானோர், இவற்றை வாங்குவதற்கு வசதியற்றோர் ஆகியோருக்கே இவற்றை லயன்ஸ் கழகம் வழங்கும்.

விண்ணப்பதாரர்கள் பெயர், விலாசம், வயது, உயரம், தேவைக்கான காரணம் ஆகிய விவரங்களுடன் லயன்ஸ் கழக உறுப்பினர் அல்லது சமாதான நீதிவான் அல்லது குருவானவர் அல்லது அரச அதிகாரியின் சிபாரிசுக் கடிதத்துடன் விண்ணப்பிக்க வேண்டும். (ஐ)

## கரணவாய் பாடசாலைக்கு புதிய மதில் அமைப்பு

வடமராட்சி,ஜன.28

கரணவாய் தாமோதர வித்தியாலதத்துக்கு ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா செலவில புதிதாக மதில் அமைக்கப்பட்டு வருகிறது.

மேற்படி மதிலை அமைப்பதற்கான நிதியை, கரணவாயைச் சேர்ந்த வெளிநாடுகளில் வாழும் இளைஞர்கள், கரணவாய் சனசமூக நிலையம் ஊடாக வழங்கியுள்ளனர்.

இதன் முதற்கட்ட வேலைகள் பூர்த்தி அடைந்துள்ளன. இரண்டாம் கட்ட வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (எ-173)

## பருத்தித்துறை சேகரத்துக்கு புதியகுரு நியமனம்

வடமராட்சி,ஜன.28

மெதடிஸ்த திருச்சபையின் பருத்தித்துறை, கட்டைவேலி சேகரத்துக்கு புதிய குருவாக அருள் திரு.அ. அழகராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரை வரவேற்கும் வைபவமும் நன்றி செலுத்தும் ஆராதனையும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கட்டைவேலி மெதடிஸ்த ஆலயத்தில் நடைபெற்றது.

இந்தச் சேகரத்தின் குருவாக முன்னர் பணியாற்றிய அருட்திரு. செல்வி வி.இரத்தினசிங்கம் உயர் கல்வி பெறுவதற்காக வெளிநாடு சென்றுள்ளார். (எ-173)

# தவறவிடப்பட்ட அ.அட்டைகள் பளை காவல் பணிமனையில்!

தென்மராட்சி,ஜன.28

பளைப் பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட ஒரு தொகுதி அடையாள அட்டைகள் மற்றும் ஆவணங்கள் பளை காவல் பணிமனையில் உள்ளன என்றும் - இவற்றினைத் தவறவிட்டவர்கள் பளை காவல் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - பணிமனைப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

அடையாள அட்டைகளுக்கு உரித்துடையவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

**தேசிய அடையாள அட்டைகள்**

கணேசமூர்த்தி விஜயகுமார் - ஏறாவூர், இராசலிங்கம் இந்திராணி - இணுவில், கிட்ணசாமி தங்கேஸ்வரன் - மீசாலை, முருகேசு சிவப்பிரகாசம் - அச்சுவேலி, சூசைப்பிள்ளை றோசம்மா - அச்சுவேலி, கிட்டினபிள்ளை தியாகராசா - மயிலட்டி, இராசையா செல்வநாயகி - முரசுமோட்டை, செல்லத்துரை பேரம்பலம் - யோகபுரம், குணச்செல்வம் மகிந்தன் - கொடிகாமம், கிறிஸ்ரின் சந்திராதேவி - யாழ்ப்பாணம், மாணிக்கம் தவேஸ்வரன் - வல்வெட்டித்துறை, கனகரத்தினம் அன்னலட்சுமி - கோப்பாய், இராசையா ஸ்ரீமனோகரன் - கோப்பாய், யோவான்பிள்ளை றோஸ்மேரி கார்மைற்றா - சுண்டிக்குளி, மாணிக்கம் சிவபாக்கியம் - றம்பொட, கிருஷ்ணசாமி தேவரஞ்சினி - கிளிநொச்சி, நாகராசா ஸ்ரீகாந்தன் - அக்கராயன் குளம், செல்வரத்தினம் இராசமலர் - சாவகச்சேரி, சின்னத்தம்பி பத்மநாதன் - முரசுமோட்டை, தாமோதரம்பிள்ளை சந்தானலட்சுமி - புங்குடுதீவு, பரராசசிங்ம் தனராசா - அரியாலை, மககுமாரகே ஜனதாஸ குமாரசிங்க - குருதெனிய, உடவத்தகே தொன் தனுஷ சனுரங்க - பனிப்பிட்டிய.

**விசேட அடையாள அட்டைகள்**

குணரத்தினம் புனிதா - மறவன்புலோ, கொன்ஸரன்ரைன் மேரி லைலா - யாழ்ப்பாணம், தம்பிராசா ஜெகதீஸ்வரன் - உரும்பிராய், செல்வநாயகம் யோகேஸ்வரி - கரவெட்டி மத்தி, இராசகுமார் சுஜந்தினி - செம்பியன்பற்று, சின்னராசா பிரதீபன் - சுன்னாகம், ரஞ்சித் திலீஸியா ரேணுகா - யாழ்ப்பாணம், செல்வரத்தினம் இராசமலர் - சாவகச்சேரி, பரராசசிங்கம் தனராசா - அரியாலை, கணேசன் சிவபாக்கியம் - முகமாலை வடக்கு, செல்வரத்தினம் லூசியா - இளவாலை, பொன்னுத்துரை ரூபன் - பண்டத்தரிப்பு, நமசிவாயம் நாகேஸ்வரி - மீசாலை, கே.சுப்பிரமணியம் - வட்டக்கச்சி.

**அலுவலக அடையாள அட்டைகள்**

திருமதி டி.எஸ்.சுபசிங்க - செயலாளர், மேல்மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கொழும்பு, கறுத்தான் சேனாதிராசா - நல்லூர் பிரதேச சபை.

**சாரதி லைசன்ஸ்**

கதிரவேற்பிள்ளை அரிச்சந்திர போஸ்.

**கடற்படை அடையாள அட்டை**

செபமாலை யேசுதாசன் - மண்டைதீவு. (எ-117)

## இலவச கண்பரிசோதனை முகாம்


வடமராட்சி,ஜன.28

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபை, தொண்டமானாறு, திருமதி தங்கலீலாவதி ஜெயச்சந்திரன் ஞாபகார்த்தமாக பன்னிரண்டாவது இலவச கண் பரிசோதனை முகாமை எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு வைத்தியசாலை மண்டபத்தில் நடத்தவுள்ளது.

இம்முகாம் வடமராட்சியில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பரிசோதனையின்போது 320 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பிறிதொரு தினத்தில் இலவச கண்ணாடி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-173)


# நீங்காத நினைவில் முதலாம் ஆண்டு



வேலணை மேற்கு

## வாதவூர் தவச்செல்வம் (J.P.)

(உரிமையாளர்: சாயிராம் கட்டட ஒப்பந்தகாரர், சாயிராம் தொலைத் தொடர்பகம், யாழ்ப்பாணம், வேலணை.)

ஆண்டொன்று ஆகிவிட்டதே
நம்பத்தான் முடியவில்லை!
கண்ணீரும் காயவில்லையே
காலந்தான் கடந்துவிட்டதே!
உங்களின் வழிகாட்டல் ஒன்றுதான்
எமக்கு என்றும் வேண்டுமப்பா!

தோற்றம்: 1943.12.15


மறைவு: 2002.02.07

74/12, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

- உங்கள் நினைவில் வாழும்
குடும்பத்தினர்.

(13795)

## குடியரசு தினக் காட்சிகள்



குடியரசு தின அணி வகுப்பில் இந்தமுறை இந்தியா தனது படை ஆற்றலை வெளிப்படுத்தியது. பல்வேறு படையணிகள் அணிவகுத்துச் செல்கின்ற ஒரு காட்சி.



கொல்கத்தாவில் நடைபெற்ற குடியரசு தின அணி வகுப்பில் குதிரைப் படை பொலீஸார்.



இந்தியத் தலைநகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற குடியரசு தினக் கொண்டாட்டத்தில் பூக்களைப்போன்று உடை யணிந்துவந்த சிறுவர்களையே படத்தில் காண்கிறீர்கள். (ஐ)



கொல்கத்தா அணிவகுப்பில் இந்திய எல்லைக் காவல் படையினர்.



இந்தியா அண்மையில் பெற்றுக்கொண்ட ரி-90 போர் டாங்களின் அணி நகர்வு.

# அணு குண்டு வீசினால் உலக வரைபடத்தில் பாகிஸ்தான் இருக்காது!

## ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பேட்டி



புதுடில்லி,ஜனவரி28

**இந்தியாமீது பாகிஸ்தான் அணு குண்டு வீசினால் அந்த நாடு உலக வரைபடத்திலேயே இருக்காது.**

**- இப்படி கடுமையான தொனியில் எச்சரித்திருக்கிறார் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பொனாண்டஸ்.**

பி.பி.ஸி. தொலைக்காட்சிக்கு அளித்த ஒரு விசேட பேட்டியில் பெர்னாண்டஸ் இந்த எச்சரிக்கையை பாகிஸ்தானுக்கு விடுத்தார்.

குடியரசுதின அணிவகுப்பில் இந்தியா தனது படைப்பலத்தை வெளிப்படுத்திய பிறகு பெர்னாண்டஸின் இந்தப் பேட்டி வெளியாகி இருக்கிறது.

முஷாரப் இந்தியாமீது அனு குண்டு வீசுவதாக தொடர்ந்து மிரட்டி வருகிறார். அப்படி நிகழ்ந்தால் பாகிஸ்தான் என்ற நாடு உலக வரைபடத்திலேயே இருக்காத அளவில் செய்து விடுவோம் - என்று அவர் கூறியிருக்கிறார்.

இந்தியாவும் பாகிஸ்தானும் அண்மைய நாள்களாக அனுகுண்டு வீசுவது பற்றி மாறிமாறி கருத்துக் கூறிவருவது தெரிந்ததே. (ஐ)

## விண்ணில் அரிய நிகழ்வு

# செவ்வாய், வெள்ளி, புதன் கிரகங்கள் தெளிவாக தெரியும்

சென்னை,ஜன.28

திங்கட்கிழமை (ஜன.27) முதல் 3 நாள்களுக்கு பூமியின் துணைக் கோளான சந்திரன் நமது சூரிய குடும்பத்தில் உள்ள இதர கோள்களான செவ்வாய், வெள்ளி, புதன் ஆகிய கோள்களுக்கு அருகில் இருக்குமாறு புவிக்குத் தோற்றமளிக்கும்

ஜனவரி 27 அதிகாலை சூரிய உதயத்தில் ஒரு மணிக்கு முன்னதாக தென்கிழக்குத் திசையில் சிவப்பு கிரகம் எனப்படும் செவ்வாய், இளம் மஞ்சள், ஒரஞ்சு வர்ணத்தில் பிரகாசமாகக் காட்சியளிக்கும் அதற்கு இடதுபுறம் சற்று மேல் திசையில் பிறைச் சந்திரன் காட்சியளிக்கும் (சாதாரணமாக செவ்வாய் 3 முதல் 4 மணி சூரிய உதயத்துக்கு முன் உதயமாகும்.)

ஜனவரி 28 அதிகாலை தென் கிழக்குத் திசையில் அடிவானத்தில் விடிவெள்ளி எனப்படும் வெள்ளி கிரகம் பிரகாசமாகவும் சூரிய உதயத்துக்கு 2 மணி நேரம் முன்பாகத் தோன்றும். அதற்கு கீழ் திசையில் வலது புறத்தில் சந்திரன் வெள்ளிக்கு அருகில் உள்ளதுபோல நம் புவிக்கு காட்சியளிக்கும்.

மேற்கண்ட இரு நாள்களை விடவும் மெல்லிய கோடு போன்ற பிறைச் சந்திரன் ஜனவரி 29 ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை சூரிய உதயத்துக்கு 45 நிமிடங்களுக்கு முன்பாக நம் சூரியக் குடும்பத்தில் உள்ள சூரியனுக்கு அருகில் உள்ள புதன் கிரகம் தென்கிழக்கு திசையில் அநேகமாகப் பிரகாசமான மஞ்சள் ஒரஞ்சு கலவை நிறத்தில் காட்சியளிக்கும். அதன் இடதுபுறத்தில் முடிய கை போன்ற தோற்றத்துடன் சந்திரன் காட்சியளிக்கும்.

மேற்கூறிய அனைத்து நிகழ்வுகளும் நம் சாதாரண பார்வையில் தெளிந்த வானத்தில் காணலாம் என 'நாஸா' நிறுவனம் தெரிவித்துள்ளது.

## திரிபுரா தாக்குதலில் 11 பேர் உயிரிழப்பு

கௌஹாத்தி,ஜன.28

இந்தியாவின் திரிபுரா மாநிலத்தில் தேர்தல் பொதுக்கூட்டம் ஒன்றில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில 11 பேர் உயிரிழந்தனர். இவர்களில் ஐந்து பேர் பெண்கள். ஒரு சிறுமியும கொல்லப்பட்டாள்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு திரிபுரா தலைநகரம் அகர்தலாவில் இருந்து 18 கி.மீ. தொலைவில் உள்ள மன்டை என்னும் கிராமத்தில் நடந்தது.

இதில் பலியானவர்களில் பெரும்பாலானோர் ஆளுங்கட்சியான சி.பி.எம்.கட்சியைச் சேர்ந்தவர்கள். (ஐ)

## ஆயுதக் களஞ்சியத்தில், வெடிப்பு

லீமா,ஜன.28

பெரு நாட்டு எல்லைப்பரப்பில் அமைந்திருந்த இராணுவத்தின் ஆயுதக் களஞ்சியம் ஒன்றில் திடீரென வெடிப்புக்கள் பல ஏற்பட்டன. ஆறு படையினர் கொல்லப்பட்டனர்; எண்பது பேர் வரையில் காயமடைந்தனர்; ஆயுதக் களஞ்சியத்துக்கு அருகில் இருந்த பல கட்டடங்கள், வீடுகள் சேதமடைந்தன. (ஐ)

## மொங்கோலியாவில் கடுங்குளிர்

மொங்கோலியா,ஜன.28

மொங்கோலியாவில் நிலவும் கடுங் குளிர் காரணமாக லட்சக்கணக்கான கால்நடைகள் மடியும் நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே ஆயிரக்கணக்கான கால்நடைகள் இறந்துள்ளன.

# 17 ஆவது மாடியிலிருந்து குதித்த பெண் தப்பினார்!

டுபாய்,ஜன,28

தற்கொலை செய்து கொள்வதற்காக அடுக்கு மாடிக் குடியிருப்பின் 17 ஆவது தளத்தில் இருந்து கீழே குதித்த 30 வயதுப் பெண் உயிர் தப்பினார்.

இச்சம்பவம் அபுதாபியில் நிகழ்தது. இப் பெண் தற்கொலை செய்து கொள்ள முயல்வதை வேடிக்கை பார்க்க ஏராளமான பொதுமக்கள் கூடினர். இதுபற்றி தகவல் அறிந்த பொலீஸார் காற்றடைந்த படுக்கையை அந்த அடுக்குமாடி குடியிருப்பின் அருகே வைத்தனர்.

இப்படுக்கை மீது விழுந்த அப்பெண் காயமின்றி உயிர் தப்பினார். மருத்துவப் பரிசோதனைக்குப் பின்னர் அவரிடம் பொலீஸார் விசாரணை நடத்தினர். அப்பெண்ணின் பெயர் மற்றும் இதர விவரங்களை பொலீஸார் தெரிவிக்கவில்லை. (ஐ)

# தாவூத் இப்ராஹிமின் கூட்டாளி கொலை

## சந்தேக நபர்கள் நால்வர் கைது

டுபாய்,ஜன.28

மும்பையைச் சேர்ந்த பிரபல தாவூத் இப்ராஹிமின் நெருங்கிய கூட்டாளி சரத் ரெட்டி கடந்தவாரம் டுபாயில் கொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக 4 பேரை டுபாய் பொலீசார் கைது செய்யதுள்ளனர். டுபாயில் உள்ள பிரபல இந்திய கிளப்பில் இந்தக் கொலைச் சம்பவம் நடந்தது.

கைதுசெய்யப்பட்டோர் கரண் சிங் நர்சிங் ரஜீத், மனோஜ் முத்தண்ணா, அமர்பகதூர் பாம் மற்றும் சுமித் வழக்குலத் பொன்னப்பன் என அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

கடல் வழியாக இந்தியாவுக்குத் தப்பிச்செல்ல முயன்ற இவர்களை 150 பேர் கொண்ட டுபாய் பொலீஸ் குழு கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்தது.

அமர் பகதூர்தாமைத் தவிர மற்ற 3 பேரும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள். மூவரும் நேபாளம் அல்லது லைபீரியா களவுச் சீட்டுக்கள் வைத்திருந்தனர்.

சுற்றுப் பயணிகள் விசாவில் ஐக்கிய அரசு எமிரேட்டுக்கு வந்த 3 பேரும் இந்திய கிளப்பில் உறுப்பினராகச் சேர்ந்தனர்.

ரெட்டியைக் கொலை செய்வதற்கு முன்பே அவரது தினசரி நடவடிக்கைகளை டுபாயில் தங்கி இவர்கள் 4 பேரும் கடந்த 2 மாதங்களாகவே கண்காணித்து வந்திருந்தனர். (ஐ)

# இங்கிலாந்து வீரர்களுக்கு மிரட்டல் ஸிம்பாப்வே விஜயம் ரத்தாகுமா?

லண்டன்,ஜன.28

'உலகக்கிண்ணப் போட்டிகளில் விளையாடுவதற்காக இங்கிலாந்து அணி ஸிம்பாப்வேக்குச் சென்றால் வன்முறை ஏற்படும் என்று மிரட்டல் கடிதங்கள் கிடைத்துள்ளன.'

- இவ்வாறு இங்கிலாந்து - வேல்ஸ் கிரிக்கெட் சபைத் தலைவர் டேவிட் மோர்கன் தெரிவித்துள்ளார்.

'வீ.பீ.கிண்ணத் தொடரின் முதலாவது இறுதிப்போட்டிக்காக இங்கிலாந்து அணியினர் சிட்னி ஹோட்டலில் தங்கியிருந்தபோது மிரட்டல் கடிதங்கள் கிடைத்தன. வீரர்களின் அறைக்கதவுகளுக்குக் கீழே இக்கடிதங்கள் வீசப்பட்டிருந்தன' என அணித் தலைவர் நசார் ஹுசைன் மோர்கனிடம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மோர்கன் மேலும் கூறுகையில்:-

'உலகக்கிண்ணப் போட்டிக்கு ஒரு வாரத்திற்கு முன்பே ஸிம்பாப்வேக்குச் செல்ல இங்கிலாந்து வீரர்கள் தயாராகியிருந்தனர். எனினும், தற்போதைய மிரட்டல் காரணமாக இவ்வீரர்கள் தயக்கமடைந்துள்ளனர்' என்றார்.

ஸிம்பாப்வேயில் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருந்தால் ஹராரேயில் எதிர்வரும் 13ஆம் திகதி நடைபெறவுள்ள ஸிம்பாப்வேயுடனான முதலாவது போட்டியை இங்கிலாந்து புறக்கணிக்கும் என இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

திட்டமிட்டப்படி ஸிம்பாப்வேயில் போட்டிகள் நடைபெறும் என ஐ.சி.சி. வெள்ளியன்று அறிவித்தது. எனினும், எதிர்வரும் வியாழனன்று இது குறித்து மீண்டும் ஆராயப்படவுள்ளது.

கடந்த சில வாரங்களாக ஸிம்பாப்வேயில் சமையல் வாயு எண்ணெய் போன்றவற்றிற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனினும், கிரிக்கெட் அணியினருக்கும் அதிகாரிகளுக்கும் தேவையான வசதிகளை அளிக்க ஸிம்பாப்வே அரசு உறுதியளித்துள்ளது என அந்நாட்டு கிரிக்கெட் யூனியன் அறிவித்துள்ளது. (எ-5)

# விளையாட்டு

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் இன்னும் 11 நாள்களில்

### கூடுதலான விக்கெட்டுகள் வீழ்த்தியோரில் அக்ரம் முதலிடம்



1975முதல் 1999வரை நடைபெற்ற 7உலகக்கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப்போட்டிகளில் கூடுதலான விக்கெட்டுக்களை வீழ்த்தியவர்களில் பாக். வீரர் வஸிம் அக்ரம் முன்னணியில் திகழ்கிறார்.

32 போட்டிகளில் 43 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ள அக்ரம் அலன் டொனால்ட், 22 போட்டிகளில் 37 விக்கெட்டுக்களை வீழ்த்தி இரண்டாமிடத்தில் உள்ளார்.

சராசரி அடிப்படையில் பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் இம்ரான்கான் முன்னிலையில் உள்ளார். அவரது விக்கெட் ஒன்றிற்கான அவரது சராசரி ஓட்டங்கள் 19.25 ஆகும்.

ஒரே போட்டியில் கூடுதலான விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் வீரர் வின்ஸ்டன் வோல்டர் டேவிஸ் ஆவார்.

1983இல் லீட்ஸில் நடைபெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் 51 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை வீழ்த்தினார் அவர்.

கூடுதலான விக்கெட்டுக்களை வீழ்த்திய இலங்கையரில் முன்னாள் வீரர் அசந்த டிமெல் முன்னணியில் உள்ளார். அவர் 9போட்டிகளில் பங்கு பற்றி 18 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். (ஐ-5)

**உலகக் கிண்ணப்போட்டிகளில் கூடுதலான விக்கெட்டுகளை வீழ்த்திய 20 வீரர்கள்:**

| வீரர் | அணி | போ. | ஓவர் | விக். | சி.பெ |
|---|---|---|---|---|---|
| வஸிம் அக்ரம் | (பாக்.) | 32 | 277 | 43 | 4-32 |
| அலன்டொனால்ட் | (தெ.ஆ) | 22 | 194 | 37 | 4-17 |
| இம்ரான்கான் | (பாக்.) | 28 | 169.3 | 34 | 4-37 |
| ஷேன்வோர்ன் | (ஆஸி.) | 17 | 162.5 | 32 | 4-29 |
| கிறிஸ்ஹரிஸ் | (நியூஸி.) | 22 | 156.2 | 30 | 4-7 |
| இயன்பொத்தம் | (இங்கி.) | 22 | 222 | 30 | 4-31 |
| ஜே.டி.பிரீட்டஸ் | (இங்கி.) | 22 | 187.5 | 29 | 3-28 |
| ஜே.ஸ்ரீநாத் | (இந்தி.) | 23 | 192.1 | 28 | 3-34 |
| கபில்தேவ் | (இந்தி.) | 26 | 237 | 28 | 5-43 |
| சி.மெக்டெமர்ட் | (ஆஸி.) | 17 | 149 | 27 | 5-44 |
| கொட்னிவோல்ஸ் | (மே.இ) | 17 | 158 | 27 | 4-25 |
| ஸ்ரீவ்வோ | (ஆஸி.) | 33 | 173.1 | 27 | 3-36 |
| டி.பிளமிங் | (ஆஸி.) | 16 | 133.2 | 26 | 5-36 |
| முஸ்தாக்அஹமட் | (பாக்.) | 15 | 135 | 26 | 3-16 |
| அன்டிரொபர்ட்ஸ் | (மே.இ) | 16 | 170.1 | 26 | 3-32 |
| அப்துல்கதிர் | (பாக்.) | 13 | 135.4 | 24 | 5-44 |
| எம்.பிரபாகர் | (இந்தி.) | 19 | 145.1 | 24 | 4-19 |
| ஜி.மெக்ராத் | (ஆஸி.) | 17 | 158 | 24 | 5-14 |
| சி.அம்புறோஸ் | (மே.இ.) | 17 | 164.3 | 24 | 3-28 |
| அ.கும்பளே | (இந்தி.) | 14 | 137 | 23 | 3-28 |

மேற்குறிப்பிட்ட அட்டவணையில் உள்ளவர்களில் வஸிம் அக்ரம், அலன் டொனால்ட், ஷேன் வோர்ன், கிறிஸ்கரிஸ், ஜவர்லால் சிறீநாத், ஜ.மெக்ராத மற்றும் அனில் கும்ளே ஆகியோர் இம்முறை நடைபெறவுள்ள போட்டிகளில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-5)


## 31ஆம் நினைவு நாள்

தோற்றம் 02 - 09 - 1919



மறைவு 29 - 12 - 2002

எமது கழகத்தின் மூத்த உறுப்பினர்
திரு. A.M.துரைநாயகம்
அவர்களின் அன்புத் தந்தையார்
அப்பாக்குட்டி முருகேசு
அவர்கள் காலமாகி 31ஆம் நினைவுநாளை அனுசரிக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதுடன். அவரின். ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Kopay Lions Club,
Kopay.

(17793)


## அதிவேக சதம் குவித்ததில் லொயிட் முதலிடம்

லண்டன்,ஜன.28

உலகக்கிண்ண கிரிக்கெட் ஆட்டத்தில் மின்னல் வேகத்தில் சதம் குவித்த வீரர்களில் மேற்கிந்திய தீவுகள் அணியை சேர்ந்த கிளைவ் லொயிட் முதலாமிடம் பெறுகின்றார்.

1975 உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவிற்கு எதிராக 82 பந்துகளில் அவர் சதத்தைப் பெற்றார். மேற்கிந்திய அணியின் முதலாவது வெற்றிக்கு அதுதான் மிகவும் உதவியாக இருந்தது. இன்றுவரை அதுதான் உலகக் கிண்ண வரலாற்றில் அதிவிரைவான சதமாகவும் உள்ளது.

இவருக்கு அடுத்த படியாக விரைவான சதத்தைப் பெற்றவர்களின் அதே நாட்டு அணியைச் சேர்ந்த பிரைன்லாரா இரண்டாம் இடத்தில் உள்ளார். இவர் 1996 ஆம் ஆண்டு கராச்சியில் நடைபெற்ற தென்னாபிரிக்காவிற்கு எதிரான ஆட்டத்தில் 83 பந்துகளில் சதத்தைப் பெற்றார்.

பிரைன் லாராவுக்கு அடுத்ததாக சச்சின் டெண்டுல்கர் 1999 பிரிஸ்டலில் இடம்பெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் கென்யாவுக்கு எதிராக 84 பந்துகளில் சதத்தைப் பெற்று மூன்றாம் இடத்தில் உள்ளார். (ம)

## விளையாட்டு உத்தியோகத்தர் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.28

யாழ். மாவட்டத்திலுள்ள விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10மணிக்கு மாவட்ட விளையாட்டு அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அனைத்து விளையாட்டு உத்தியோகத்தர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.ஜே.எவ்ருபசிங்கம் கேட்டுள்ளார். (எ-5)


## தேவை

சைக்கிள் வேலை தெரிந்த 30 வயதுக்குட்பட்ட ஆள்கள் உடனடியாகத் தேவை. சான்றிதழ்களுடன் நேரில் வரவும். வேதனம் பேசித் தீர்மானிக்கப்படும்.

No.357, கே.கே.எஸ். றோட்.
(இலங்கை மின்சாரசபை முன்பாக),
யாழ்ப்பாணம்.

(13794)




கடந்த சனிக்கிழமை ஆஸ்திரேலிய அணி வீரர் ஷேன்வோனின் சொந்த ஊரில் இங்கிலாந்து அணியுடனான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்றது. விரைவில் ஒருநாள் கிரிக்கெட் ஆட்டத்தில் இருந்து ஷேன்வோன் ஓய்வுபெறுகிறார். இந்த ஆட்டமே அவர் ஆஸ்திரேலியாவில் விளையாடும் கடைசி ஒருநாள் ஆட்டமாகும். இதனால் ரசிகர்களிடம் அவர் விடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

## கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி நடத்தும் சுற்றுப்போட்டிகளின் இறுதியாட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.28

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவு விழாச்சபை யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திய உதைபந்தாட்டம் மற்றும் வலைபந்தாட்டம் ஆகியவற்றின் இறுதிப்போட்டிகள் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

கல்லூரி அதிபர் ந.சிவகடாட்சம் தலைமையில் நடைபெறும் இறுதி ஆட்டங்களில் பிரதமவிருந்தினர்களாக 'ஈ.எஸ்.பி.' சக நிறுவன உரிமையாளர் ஈ.எஸ்.பி. நாகரத்தினம், அமரர் ம.ரவீந்திரன் குடும்ப உறுப்பினர் த.சோம சுந்தரம் மற்றும் கல்லூரியின் பழைய மாணவரும், பிரபல கட்டட ஒப்பந்தகாரருமான பொ.சூரியகுமார் ஆகியோரும் -

சிறப்பு விருந்தினர்களாக சிறுவர் பாதுகாப்பு நிதிய யாழ். மாவட்ட நிகழ்ச்சித்திட்ட அலுவலர் ஆரஞ்சித்ஷகிலேந்திரகுமார், கோப்பாய் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் கா.சுதாகரன் மற்றும் வலிகாமம் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கச் செயலாளர் என். நவரட்ணராஜா ஆகியோரும் கலந்து கொள்வர்.

நாளை நடைபெறும் இறுதிப் போட்டியில் பங்குபற்றும் பாடசாலை மற்றும் கழக அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

**பாடசாலை மட்டம்**

உதைபந்தாட்டம் (இறுதி ஆட்டம்): இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி.

மூன்றாம் இடத்திற்கான போட்டி: தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

வலைபந்தாட்டம்: மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை எதிர் அச்சுவேலி புனித தெரேசா மகளிர் கல்லூரி.

**கழகமட்டப் போட்டிகள்**

உதைபந்தாட்டம்: வேலணை ஐயனார் வி.கழகம் எதிர் அச்செழு சித்தி விநாயகர் வி.கழகம்.

வலைபந்தாட்டம்: யாழ்.பல்கலைக்கழக அணி எதிர் அரியாலை ஐக்கிய வி.க.அணி. (எ-5)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.28

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதை. பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் பங்குபற்றுகின்றன.(எ-5)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜன.28

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 4மணி முதல் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு:-

மாலை 4 மணி - கிறீன் கிங்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் சென் மேரிஸ் விளையாட்டுக்கழகம்.

மாலை 5 மணி - குருநகர் பாரதி விளையாட்டுக் கழகம் எதிர் திருவள்ளுவர் விளையாட்டுக்கழகம்.

(எ-5)


## D.சேனாதிராஜா அன் சன்ஸ்

★ கண் பரிசோதித்துக் கண்ணாடி வழங்குமிடம்.
★ செயற்கைப் பற்கள் கட்டுமிடம்.
★ மிதப்புப் பற்களுக்கு கிளிப் செய்யுமிடம்.

பைபோர்க்கல் லென்ஸ் கோல்ட் கம்பி பிறேமுடன் ரூபா 1000 மட்டும்!.
மிதப்புப் பற்களுக்கான கிளிப் ரூபா 1000 மட்டும்!.

இல. 18A, யாழ்.பஸ் நிலையம்,
(பஸ் நிலையத்தின் கிழக்குப் பக்கமாக உள்ள கடைகள் வரிசையில்)
யாழ்ப்பாணம். (13787)

# வவுனியா ஆஸ்பத்திரி ஊழியர் நேற்று திடீர் வேலை நிறுத்தம்

## சிலமணி நேரத்தில் முடிவுற்றது

வவுனியா,ஜன.28

வவுனியா ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள், ஊழியர்கள் நேற்றுக் காலை திடீர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். எனினும் ஒருசில மணிநேரத்தில் வேலை நிறுத்தம் முடிவுற்றது.

நேற்றுமுன்தினம் அதிகாலை வைத்தியசாலை சிற்றூழியர் ஒருவர் தாக்கப்பட்டதைக் கண்டித்தே இந்த வேலைநிறுத்தம் நடைபெற்றது.

பாம்புக்கடிக்கு உள்ளான நோயாளி ஒருவரைப் பார்வையிட வந்த ஒரு நபர் தான் இராணுவ வீரர் எனக்கூறி உள்ளே செல்ல முயன்றுள்ளார். சிற்றூழியர் அனுமதி மறுத்த போதிலும் மீறி உள்ளே சென்ற அந்த நபர் திரும்பி வருகையில் சிற்றூழியரைத் தாக்கிவிட்டு தப்பிச்செல்ல முயன்றார். எனினும் வைத்தியசாலைப் பொலீஸார் அந்த நபரைக் கைது செய்து வவுனியா பொலீஸில் ஒப்படைத்தனர்.

விசாரணையின்போது அவர் இராணுவவீரர் இல்லை என்பது தெரியவந்தது. தாக்கப்பட்ட சிற்றூழியர் தம்பிராஜா, வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றார்.

கைதுசெய்யப்பட்ட நபர் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியே வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென பொலீஸார் தெரிவித்ததை அடுத்து வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

(ம)

# தென்மராட்சியில் அவசர திட்டங்களை நடைமுறைப்படுத்த உடன் நடவடிக்கை

தென்மராட்சி,ஜன.28

தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள பகுதிகளுக்குத் தேவையான - மிக அவசியமான - பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படவுள்ளன.

அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டிய சுகாதாரம், குடி தண்ணீர் விநியோகம் என்பன உட்பட அவசியமெனக்கருதப்படும் பணிகள் பற்றிய விவரங்களை உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு சாவகச்சேரி தொகுதிக்கான 'சிறான்' அமைப்பின் உப குழுவினர் பிரதேச கிராமஅலுவலர்களையும் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களையும் கோரியுள்ளனர்.

நேற்று சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெற்ற தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவின் கூட்டத்துக்கு வருகைதந்த உபகுழு உறுப்பினர்கள் இந்த விவரங்களை உடனடியாகத் தருமாறு கோரினார்.

பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் உபகுழு உறுப்பினர்களான அரசின் பிரதிநிதி குணசிங்கம், விடுதலைப் புலிகளின் பிரதிநிதி க.அருந்தவபாலன், அகதிகளுக்கான ஐநா.தூதுவராலயத்தின் பிரதிநிதி ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் உட்பட பிரதேசத்தின் திணைக்களத் தலைவர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

(ம-117)

## 15 வயதுச் சிறுமி பெற்றோரிடம் ஒப்படைப்பு

தென்மராட்சி,ஜன.28

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் கடந்த 23ஆம் திகதி இணைந்த 15 வயதுச் சிறுமியை தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் கலைவாணன் நேற்றுமுன்தினம் சிறுமியின் பெற்றோரிடம் ஒப்படைத்தார்.

துன்னாலை தெற்கைச் சேர்ந்த இந்தச்சிறுமி தமது அமைப்பில் இணைவதற்காக சாவகச்சேரி சங்கத்தானையில் உள்ள அரசியல் செயலகத்திற்கு வந்ததாகவும், பின்னர் அந்தச்சிறுமியின் பெற்றோர் வரவழைக்கப் பட்டு அவர் ஒப்படைக்கப்பட்டதாகவும் பொறுப்பாளர் தெரிவித்தார்.

(ம-117)

விமானங்களில் ஆசனங்கள் கிடைக்காத

# 380 ஹஜ் யாத்திரிகர்களுக்கு மேலதிக சவூதி விமான சேவை

இவ்வாண்டு புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற விமான ஆசனங்கள் கிடைக்காத சுமார் 380 யாத்திரிகர்களுக்காக மேலதிக விமானமொன்றைச் சேவையில் ஈடுபடுத்த சவூதியா விமானசேவை இணக்கம் தெரிவித்துள்ளது.

முஸ்லிம் சமய விவாரங்களுக்கு பொறுப்பான அமைச்சர் ரவூப் ஹக்கீம் சவூதியா விமானசேவைத் தலைமையகத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கலாநிதி காலித் பின் பக்ர் மற்றும் இலங்கையிலுள்ள சவூதியா விமான சேவை முகாமையாளர் கமால் அமீன் ஆகியோருடன் இது தொடர்பாக தொடர்புகொண்டதன் பயனாகவே மேலதிக விமானம் சேவையில் ஈடுபடுத்தப்படவிருப்பதாக அமைச்சரின் முஸ்லிம் சமய விவகாரங்களுக்கு பொறுப்பான ஆலோசகர் அஷ்ஷெய்க் எம்.இனாமுல்லாஹ் தெரிவித்தார்.

இவ்வாண்டு இலங்கையில் இருந்து ஐயாயிரத்துக்கு மேற்பட்ட யாத்திரிகர்கள் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றவுள்ளனர். சுமார் அறுபது ஹஜ் முகவர்கள் இவர்களை அழைத்துச் செல்கின்றனர். ஜித்தா விமான நிலையத்தில் இலங்கை ஹஜ் யாத்திரிகர்களை வரவேற்று உபசரிக்க அமைச்சர் ஹக்கீமின் பணிப்புரையின் பேரில் விஷேட அதிகாரிகள் குழுவொன்று நாள்தோறும் கடமையில் ஈடுபட்டுள்ளது.

(ம)

## பளைப் பிரதேச சபை ஊழியர்களால் துப்புரவு

பளைப் பிரதேச சபை தலைமை அலுவலக வளவு பிரதேச சபை ஊழியர்களால் துப்புரவு செய்யப்பட்டு வருகிறது.

யுத்த அனர்த்தங்களால் மேற்படி கட்டடங்கள் சேதமடைந்ததுடன் வளவு பற்றைக்காடாகவும் மாறியிருந்தது.

அண்மையில் பளைக்கு வருகை தந்த கிளிநொச்சி மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கட்டட இடிபாடுகளையும், பற்றைக் காடுகளையும் துப்புரவு செய்யுமாறு விடுத்த உத்தரவை அடுத்து துப்புரவுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தக் காணியில் பிரதேச சபையின் தலைமை அலுவலகம், பொது நூலகம், ஆயுர்வேத மருந்தகம், பாலர் பாடசாலை ஆகியவற்றின் கட்டடங்கள் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(எ-117)

## படகுகளின் 'புறொப்பிளர்'களில் சிக்கும் மீன்பிடி வலைகள்

எழுவைதீவு, அனலைதீவு, கடற்பகுதிகளில் மீனவர்களால் கடலில் இடப்படும் மிதப்புவலைகளில் தெளிவான அடையாளம் இடப்படாததினால் குறித்த வலைகள் பயணிகள் படகுகளின் 'புறொப்பிளர்'களில் சிக்கிக்கொள்வதாகவும் -

இதனால் பயணிகள் படகுகளின் 'புறொப்பிளர்' கருவி சேதமடைவதுடன், இவற்றில் சிக்கியுள்ள வலைகளை அகற்றும் பொருட்டு நடுக்கடலில் படகுகளை நங்கூரம் பாய்ச்சி நிறுத்த வேண்டியுள்ளதாகவும் -

படகோட்டிகள் கவலை தெரிவித்தனர்.

வலைகள் சிக்குவதையடுத்து அவற்றை அகற்றுவதற்காக படகுகளை பலமணிநேரம் கடலில் நிறுத்த வேண்டியுள்ளதால், படகுகள் அங்கு மிங்கும் சரியும்போது படகில் உள்ள பயணிகள் பதகளிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, மீனவர்கள் கடலில் வலைகளை போடும்போது அவற்றில் தெளிவான மிதப்புகளை கட்டுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.(எ-16)

## தவறவிடப்பட்ட பொருள்கள் கண்டெடுப்பு


நுணாவில் பகுதியில் வாகனமொன்றிலிருந்து தவறியதாக கருதப்படும் தங்க நகைகள், பணம், உடுபுடைவைகள் மற்றும் ஆவணங்கள் அடங்கிய ஒரு பயணப்பை சாவகச்சேரி நகர வர்த்தகர் ஒருவரால் கடந்த சனிக்கிழமை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பயணப்பையை தவறவிட்டவர் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தில் தகுந்த ஆதாரங்காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் என மன்றத் தலைவர் ந.சற்குணராசா தெரிவித்தார்.

(ம-117)


கண்ணீர் அஞ்சலி


எமது பல்கலைக்கழக Level - II
மின் பொறியியல்துறையைச் சேர்ந்த சிரேஷ்டமாணவன்
ஸ்ரீ-டினேஸ்குமார்
அவர்களின் பாசமிகு தந்தையார்
கேசவப்பிள்ளை தனபாலசிங்கம்
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.
Level - I நண்பர்கள்
பொறியியல்பீடம், மொறட்டுவ பல்கலைக்கழகம்.
(13804)


யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி
2005 க.பொ.த. உயர்தர வகுப்பு

2002 க.பொ.த. சா/த பரீட்சை எடுத்த கல்லூரி மாணவிகளை 30.01.2003 வியாழக்கிழமை உயர்தர வகுப்பிற்கு சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதிபர்,
யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி.
(13796)

விற்பனைக்கு

AIKAI G.X
A & D G.X
சிறந்த தரமுள்ள Audio டெக்குகளும்
மற்றும் Mobitel கையடக்கத் தொலைபேசிகளும்
விற்பனைக்கு வந்துள்ளன.

முகவரி: சத்ஸ் நுகர்பொருள் கலையகம்
25, பஸ் நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம்.
T.P - 0777 - 243676
(13806)

காணி அல்லது காணியுடன் வீடு தேவை

யாழ்ப்பாணம் குருநகரை அண்டிய பகுதியில் காணி அல்லது காணியுடன் கூடிய வீடு தேவை.
தரகர் இன்றி தொடர்புகொள்ள வேண்டிய முகவரி.
அ.றமேஷ் (அனலா),
21, முதலாம் குறுக்குத் தெரு,
(13798) குருநகர், யாழ்ப்பாணம். T.P.No 077 7049995

ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு
விஜய், சினேகா, வடிவேல், மணிவண்ணன்

காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கற்றுக்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நிறைஞ்சனாஸ் சங்கானை

அற்புதம் (ரீலீஸ்)
TOMB RAIDER (c-26093)

நாகம்ஸ் சுன்னாகம்.
சூர்யா, ஜோதிகா, சிவகுமார், ரகுவரன் நடித்த

உயிரிலே கலந்தது (ரீலீஸ்)
காட்சிகள் தினசரி 11.00, 3.00, 6.30 (பு.நேரம்).
(இனிய பாடல்கள் நிறைந்த படம்)


# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை சரஸ்வதி

அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் France ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சரஸ்வதி அவர்கள் நேற்று (27.01.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - நாகம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும், சிவசம்பு, சின்னம்மா (பிரான்ஸ்), பரிமளம், பொன்னையா (திருச்சி), நடராசா (ஓய்வூதியர், பொலீஸ் திணைக்களம்), காலஞ்சென்ற கந்தசாமி (பேருந்து நடத்துநர்) ஆகியோரது அருமைச் சகோதரியும் அம்பிகைபாலன் (பிரான்ஸ்), சிறீரஞ்சன் (பிரான்ஸ்) ஆகியோரது சிறியதாயும் விக்கினேஸ்வரன், யோகேஸ்வரன், சிறீகரன் (பிரான்ஸ்), குகதாசன் (பிரான்ஸ்), சேகர் (திருச்சி), சந்திரன் (பிரான்ஸ்), ரவீந்திரா (பிரான்ஸ்), கமலேந்திரா (பிரான்ஸ்), குலேந்திரன், சர்வேந்திரன், ஜெயந்தி, பரமேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும் புலோகம், வள்ளியம்மை, சிவபாக்கியம், சிவா (பிரான்ஸ்), ஜெயன் (பிரான்ஸ்), தனபாலு (சுவிஸ்) ஆகியோரது மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31.01.2003 வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00மணியளவில் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*துவாரகை வீதி,* தகவல்:
*கோண்டாவில் வடக்கு,* க.நடராஜா (சகோதரன்) குடும்பத்தினர்.
*கோண்டாவில்.* (13805) T.P. (பிரான்ஸ்) 00331-48383440

## திருமதி சிவபாக்கியம் இராசதுரை

வட்டு.கிழக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி சிவபாக்கியம் இராசதுரை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - இராசம்மா அவர்களின் மகளும் காலஞ்சென்ற இராசதுரை (முன்னாள் தபால் விநியோகஸ்தர், அஞ்சல் அலுவலகம், சித்தன்கேணி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ச.தர்மலிங்கம் ((முன்னாள் ஆசிரியை, யா/வட்டு. இந்துக் கல்லூரி), ஓய்வுபெற்ற Dr.ச.நடராசா (சுவிற்ஸர்லாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி த.பஞ்சலட்சுமி, திருமதி ந.வசந்தமலர் ஆகியோரின அன்பு மைத்துனியும் சரவணபவானந்தன் (அவுஸ்திரேலியா), திருச்செல்வி (யா/வட்டு. இந்துக் கல்லூரி), கலைச்செல்வி (கனடா), நித்தியானந்தன் (ஜேர்மனி), சிவானந்தன் (அமெரிக்கா), குகானந்தன் (கனடா), நளாயினி (சுவிற்ஸர்லாந்து), நிரஞ்சினி (சுவிற்ஸர்லாந்து) ஆகியோரின் அன்பு மாமியாரும் செல்வலட்சுமி (அவுஸ்திரேலியா), அமரர் தர்மகுலசேகரம் (கிராம அலுவலர், அராலி தெற்கு), பாலச்சந்திரன் (கனடா), சர்மிளா (ஜேர்மனி), ரஜனி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு சிறியதாயும் சிவாயன், சாரங்கன், துஷ்யந்தன், அபிஷேக், அபிலாஷா, நிரஞ்சன், நிடிலின் ஆகியோரின் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2003) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு திருமதி தர்மகுலசேகரம் அவர்களின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு மயானத்துக்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி தி.தர்மகுலசேகரம்
(C/26252) யா/வட்டு. இந்துக் கல்லூரி (சித்தன்கேணி)

## திருமதி குலசிங்கம் செல்லம்மா

காரைநகர், சிவன்கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 50/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி குலசிங்கம் செல்லம்மா கடந்த 25.01.2003 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஆறுமுகம் குலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சிவனேஸ்வரி, சுந்தரேஸ்வரி (ஷஹீரா - ஆசிரியை), ஆறுமுகநாதன் (ஜேர்மனி), தினமணி (ஜேர்மனி) ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற புவனச்சந்திரன், கலீலுர் (ஜேர்மனி), ரகுமான் (ஆசிரிய ஆலோசகர்), சறோஜினிதேவி (ஜேர்மனி), அற்புதராசா (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் யசோதரன், திரு.திருமதி சிவசுந்தரேஸ்வரன், அம்பிகா (லண்டன்), ரவீந்திரன், பாலேந்திரன், அஸீம், ஷிபான், ஆஸிர், தினேஸ், திவ்யா, சிவன்யா, ஆர்த்திகன், அஜிதன் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2003) செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*50/1 அம்மன் வீதி,* தகவல்:
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (13801) - குடும்பத்தினர்.

## திருமதி மார்க்கண்டு செல்லம்மா

களைநகர், அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மார்க்கண்டு செல்லம்மா அவர்கள் நேற்று (27.01.2003) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் மார்க்கண்டு அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற முருகையா (சுப.தெ.வ.அபிவிருத்திச் சங்கம்) மற்றும் அழகரட்ணம் (இ.போ.சபை, கோண்டாவில்), இராசரட்ணம் (ஜேர்மனி), சகுந்தலாதேவி, சுசீலாதேவி, நிர்மலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஞானசேகரம், பாலபாஸ்கரன் (அ.ப.தெ.வ.அ.கூ.சங்கம்), சாள்ஸ், இராசமலர், கமலா, புஸ்பா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2003) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*களைநகர்,* தகவல்:
*அளவெட்டி தெற்கு,* மா.அழகரட்ணம்
*அளவெட்டி.* (13802) (மகன் - இ.போ.ச., கோண்டாவில்).

## ஆசிய - பசுபிக் பிராந்திய
# நிலக் கண்ணி ஆய்வாளர் மாநாடு நேற்றுக் கொழும்பில் ஆரம்பம்!

ஆசிய - பசுபிக் பிராந்திய நிலகண்ணிவெடி மாநாடு இலங்கையில் முதன் முதலாக நேற்று நடைபெற்றது.

நிலக்கண்ணிவெடி எதிர்ப்பு இயக்கமும், மதங்களுக்கு இடையிலான சமாதான அமைப்பு ஆகியவற்றின் அனுசரணையுடன் கொழும்பு வேதாகம நிலையத்தில் நேற்று ஆரம்பமான இம்மாநாடு, எதிர்வரும் 30 ஆம் திகதிவரை நான்கு நாள்கள் தொடர்ந்து நடைபெறும்.

இருபது நாடுகளிலிருந்து பிரதிநிதிகளும் இலங்கை நிலக்கண்ணிவெடி எதிர்ப்பு இயக்க சமாதான அமைப்பின் சமயத்தலைவர்களும் யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை பகுதிகளிலிருந்து பேராளர்களும் இதில் கலந்துகொண்டனர்.

இலங்கையில் மிதிவெடிகளின் தாக்கம் பற்றிய தகவல்களையும் மிதிவெடிகள் எவ்வாறு கையாளப்பட்டு அகற்றப்படுகின்றன என்பதற்கான விளக்கங்களையும் வெளிநாட்டு பிரதிநிதிகள் எடுத்துரைத்தனர்.

நோர்வே, பெல்ஜியம், கனடா, ஜேர்மன், ஜப்பான் முதலான நாடுகளின் பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்துகொண்டனர். இவர்கள் சர்வதேச மிதிவெடிகளின் அபாயம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு பணிபுரியும் 'லாண்ட்மைன் மொனிடர்' அமைப்பினைச் சேர்ந்தவர்களாவர்.

மாநாட்டில் ஐ.நா.சபை பிரதிநிதியிடம் பத்து லட்சம் மக்கள் கையெழுத்திட்ட - நிலக்கண்ணி வெடிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் - மகஜர் ஒன்றின் பிரதியை சமாதான அமைப்பின் தலைவர் சாலிய எதிரிசிங்க கையளித்தார்.

பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்தராஜபக்ஷ, ஜீ.எல்.பீரிஸ் முதலானோர் அனுப்பிவைத்த வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பட்டன.

அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன, பொ.ஐ.மு.நாடாளுமன்ற உறுப்பினர் பத்தேகம சமிந்த தேரர், சீம்பலகஸ வேவவிமலசார தேரர், சுவாமி கதம்பகணானந்தா, மௌலவி ஏ.எம்.ஏ. அஸீஸ், கனடாவுக்கான உயர் ஸ்தானிகர் மற்றும் வெல்லே வத்தஞானதி தேரர், அருட்தந்தை அநுர பெரேரா முதலானோரும் உரையாற்றினர்.(ம)

## உயிரிழந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் பொறிக்கப்பட்ட ஞாபகார்த்தத் தூபியை புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதி கேணல் கருணா இன்று காலை 9 மணிக்குத் திறந்து வைப்பார்.

அம்பிலாந்துறை, அரசடித்தீவு, மகிழடித்தீவு, முதலைக்குடி, முனைக்காடு, கொக்கட்டிச்சோலை, கடுக்காய்முனை, பண்டாரியவெளி, பட்டிப்பளை போன்ற பகுதிகளில் வசித்த பொதுமக்களே படையினரால் படுகொலைசெய்யப்பட்டனர் எனக் கூறப்படுகின்றது.

அவர்கள் கொலை செய்யப்பட்டு இன்று 16 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன. 1987 ஜனவரி மாதம் 28ஆம் திகதி படுகொலை இடம்பெற்றது. (ம)

## எதிர்க்கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும் பிரச்சினைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் இவ்விஜயத்தின் போது அறிந்து கொள்ளவிருக்கிறார்.

அத்துடன் கிழக்கு மாகாண ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அங்கத்தவர்களையும் அவர் சந்தித்துப் பேசவுள்ளார் எனவும் தெரிகிறது.

மிக அண்மையிலேயே அவர் யாழ்.குடாநாட்டிற்கும் முதற்றடவையாக விஜயம் செய்து நிலைமைகளை நேரில் பார்வையிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)


**A/L 2004**

**பங்குடமை**

ஆரம்பம்: 29.01.2003

புதன் மாலை 3.30

செவ் } 3.30 - புதன் } 4.30 சனி } 2.00 - ஞாயிறு } 3.00

ஆசிரியர்:

S.S.சீலன் B.B.A (F.M.Spl.)

**வர்த்தகக் கல்லூரி**

சங்கானை.

(13638)


## வடமராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரவு பாக்குநீரிணையில் மீன்பிடிக்கச் சென்றிருந்தனர். வலைகளை வீசிவிட்டு வள்ளத்தில் காத்திருந்தபோது அதிவேகப் படகு ஒன்றில் அங்கு வந்த கடற்படையினர் தமக்கு மீன் தருமாறு கேட்டதாகவும் -

இப்போது வலைகளை எடுக்க முடியாது என மீனவர்கள் தெரிவிக்கவே அவர்கள் கடலில் வீசியிருந்த ஒன்றரை லட்சம் பெறுமதியான வலைகளை கடற்படையினர் வெட்டி கடலில் விட்டதாகவும் -

இதனையடுத்து மீனவர்கள் கடலில் வீசப்பட்ட வலைகளை மீட்க முடியாமல் கரை திரும்பியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மறுநாளான 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல், தாம் இழந்த வலைகளைத் தேடி மீட்பதற்காக இம் மீனவர்கள் வள்ளத்தில் கடலுக்குச் சென்றுள்ளனர். சுமார் 10 கிலோ மீற்றர் தூரம் அவர்கள் சென்றதும் அதிவேகப் படகு ஒன்றில் வந்த கடற்படையினர் இவர்களை மறித்து விசாரித்துள்ளனர். அவ்வேளை மீனவர்களின் வள்ளத்தில் இருந்த நூல், ஊசி போன்ற கடற்றொழில் உபகரணங்களையும், வள்ளத்தின் இயந்திரத்தின் பாவனைக்கு வைத்திருந்த மண்ணெண்ணெய்யையும் எடுத்து கடலுக்குள் வீசிய கடற்படையினர் இவர்களை தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. மீனவர்களால் தொழிலுக்காக கொண்டு செல்லப்படும் பாஸ்களும் படையினரால் கிழித்தெறியப்பட்டதாகக் கூறப்பட்டது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து நான்கு மீனவர்களும் உடனடியாக கரை திரும்பினர்.

வடமராட்சி கடற்புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தில் இச்சம்பவம் தொடர்பாக முறையிடப்பட்டுள்ளது. (ம-173)

## காய்ச்சலால் குழந்தை உயிரிழப்பு!

யாழ்ப்பாணம்,ஜன.28

காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் நேற்றுமுன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒன்றரை வயதுக் குழந்தை ஒன்று சிகிச்சை பலனளிக்காது நேற்றிரவு உயிரிழந்தது.

வேலணை கிழக்கைச் சேர்ந்த சுவேந்திரன் மாதுமை என்ற பெண் குழந்தையே இவ்வாறு உயிரிழநதது. (ம-4)

## கண்காணிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விடயத்தை உரியவர்களிடம் தெரிவிப்பதாக கண்காணிப்புக் குழுத் தலைவர் உறுதியளித்தார்.

தெல்லிப்பழை வைத்தியசாலை, காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை ஆகியவற்றையும் கண் காணிப்புக் குழுத்தலைவர் சென்று பார்வையிட்டார்.

யாழ். இராணுவத் தளபதி பிரிகேடியர் இரட்ணசபாபதியை பலாலி இராணுவத் தலைமையகத்தில் சந்தித்து உயர் பாதுகாப்பு வலயம் குறித்தும் அவர் பேசவிருந்தார்.

இன்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், புலித்தேவன் ஆகியோரைச் சந்திக்கும் அவர் மட்டக்களப்பில் கேணல் கருணாவைச் சந்திப்பார். (ம)

## அவசர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமாதானத்துக்கான அடித்தளமிடப்படும்.

யாழ்.குடாநாட்டு மீனவர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். போதிய ஐஸ் உற்பத்தி வசதிகள் இல்லாமையால் பெருமளவு மீன்கள் பாதுகாக்கமுடியாமல் கடலில் கொட்டப்படுகின்றன. எனவே, இதற்கான ஐஸ் உற்பத்தி வசதிகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டிய தேவை உள்ளது. இவற்றை விட மேலும் பல அவசர அபிவிருத்தி வேலைகள் இங்கு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் இங்குள்ள அரச நிறுவனங்களுக்கு மேலும் உதவி வழங்க வேண்டிய பொறுப்பு அரசிற்கு உள்ளது. உதவி வழங்குவதன் மூலம் இங்குள்ள மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை ஓரளவிற்குப் பூர்த்தி செய்யமுடியும்.

இதேவேளை - யாழ்.குடாநாட்டில் பொலீஸாரின் பணி சிறந்த முறையில் நடைபெறவில்லை. தமிழ்மொழி நன்கு தெரிந்த போதியளவு பொலீஸார் இங்கு கடமையில் இல்லை. முறைப்பாடுகளும் தமிழில் பதிவு பதியப்படவில்லை. இதனால் குடாநாட்டு மக்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். இப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படவேண்டும் என்றார் ரொன்ட் புருஹோவ்டே.

கண்காணிப்புக் குழுத் தலைவருடன் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளான ரொட் ஜெம்ரிபோன், பேர் கிறிஸ்ரர் லார்சன் ஆகியோரும் விஜயம் செய்தனர்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகிய நாள் முதல் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவராகப் பணிபுரிந்த ரொன்ட் புருஹோவ்டே தற்போது நோர்வே அரசினால் மாற்றப்பட்டுள்ளார். இவருடைய இடத்திற்கு புதிய தலைவராக ட்ரைகெவ் ரெலிங்சன் பதவியேற்கவுள்ளார்.

ரொன்ட் புருஹோவ்டே நேற்று தனது இறுதி விஜயத்தை குடாநாட்டுக்கு மேற்கொண்டார். (ஐ-8)


**LOGIC** முன்னோடிப் பரீட்சை

விண்ணப்ப முடிவு திகதி : 2.2.2003

தொடர்பு:

BRIGHTMAN - நீராவியடி.

P.கமல்

(13803)



A/L 2004

**LOGIC**

☆பகுதி - II (விஞ்ஞானமுறை)

☆குறியீட்டு அளவையியல்

எஸ்.எஸ்.மனோகரன்

29 புதன் மாலை 5மணி

FURTHER EDUCATION

(உடுவில் மகளிர் கல்லூரி)

(13761)


# பிரிட்டிஷ் அமைச்சர் இலங்கை வருகை

பிரிட்டனின் வெளிவிவகார அலுவலக அமைச்சர் மைக்பிறைன் இரண்டு நாள் விஜயமாக நாளை இலங்கை வருகிறார்.

இங்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட மற்றும் அரசின் மூத்த அதிகாரிகளை சந்திக்கும் அவர் தற்போதைய சமாதான முயற்சிகள் மற்றும் இரு நாடுகளுக்கிடையிலான உறவு விடயங்கள் குறித்தும் இந்த பிரமுகர்களுடன் உரையாடுவார்.

நாளை பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் கருத்தரங்கு ஒன்றில் 'சர்வதேச பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள புதிய அபாயங்கள்' என்ற தலைப்பில் அவர் உரையாற்றுவார். சர்வதேச மட்டத்தின் உடனடி நலன்சார் சிரத்தைகள் மட்டுமல்லாமல் இலங்கை சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகவும் பிரிட்டனின் நிலைப்பாடுகளை இந்தக் கருத்தரங்கில் விளக்கும் அவர், அது தொடர்பாக அக்கருத்தரங்கில் பங்குபற்றுவோரின் கேள்விகளுக்கு பதிலளிப்பார்.

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சு அலுவலகத்தில் இலங்கை விவகாரங்களை கையாளும் பொறுப்பு இவரின் கீழேயே உள்ளது. (ம)

## கண்டி தீ அனர்த்தத்தினால் 2 1/2 கோடி ரூபா நஷ்டம்

கண்டி டி.எஸ்.சேனநாயக்க வீதியில் உள்ள வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் கடையில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட தீ அனர்த்தத்தினால் சுமார் இரண்டரைக் கோடி ரூபா பெறுமதியான உடைமைகள் எரிந்து நாசமாகியுள்ளன. (ம)

## காவலில் உள்ள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதனை அனுமதித்த நீதியரசர்கள் எதிர்வரும் 18ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தனர்.

அத்துடன் முதலாம் பிரதிவாதியான திருகோணமலைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் நீதிமன்றத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த அறிக்கையையும் அரச சட்டத்தரணியின் பரிசீலனைக்காக நீதியரசர்கள் கையளித்தனர்.

செல்வநாயகம் செல்வம், ஏகாம்பரம் சுரேஷ், முத்துலிங்கம் ரமணன், கந்தசாமி கிருபா, சண்முகம் சாந்தன், ஆத்மன் தீபன் ஆகியோரே விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் ஆவர்.

கடந்த நவம்பர் மாதம் முதலாம் திகதி திருகோணமலை கடலில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள் அனைவரும் திருகோணமலைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு, பின்னர் திருகோணமலை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர்.

தீங்கிழைக்கும் ஆயுதங்கள் சட்டத்தின் கீழ் இவர்கள் அனைவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இவர்கள் சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தாவும் திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் சட்டத்தரணி தே.சிவபாலனும் ஆஜராகின்றனர்.

சட்டமா அதிபரிடம் இந்த ஆறு விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களதும் பிணை மனுக்கள் தொடர்பாக நேரடியாக சட்டத்தரணிகள் விதந்துரைசெய்துள்ளனர். சட்டமா அதிபர், பிணை மனுக்களுக்கு சம்மதம் தெரிவித்தால் அடுத்த தவணைக்கு முன்னரே பிணை வழக்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பிரேரணை ஒன்றின் மூலம் எடுத்துக்கொள்ளச் செய்து பிணை உத்தரவு பெற முடியும் எனத் தாங்கள் எதிர்பார்ப்பதாக அவர்களின் சட்டத்தரணிகள் தெரிவித்தனர். (ம)

## பொ.ஐ.மு. - ஜே.வி.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டே தவிர பொ.ஐ.முன்னணிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டு அல்ல என்று அவை தெரிவித்துள்ளன.

இதனை அடுத்து கூட்டணியை ஏற்படுத்தும் விடயத்தில் பொ.ஐ.முன்னணி பிரதிநிதி ஒருவரையும் சேர்த்துக்கொள்ள ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார். அதன்படியே பொ.ஐ.முன்னணியின் செயலாளர் டி.எம்.ஜெயரத்னவை அவர் முன்னணி சார்பில் பேச்சுக்களுக்கு நியமித்தார்.

ஆனால், டி.எம்.ஜெயரத்னவும் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவரே. அத்துடன் அவர் ஜனாதிபதியின் மிகவும் நம்பிக்கைக்கு உரிய ஒருவருமாவார். இதனால், தொடர்ந்தும் பொ.ஐ.முன்னணி சார்பில் பேச்சுக்களுக்கு எவரும் நியமிக்கப்படவில்லை என்று முன்னணியின் ஏனைய கட்சிகளான கமியூனிஸ்ட் கட்சிகளும் சமசமாஜக் கட்சியும் கூறுகின்றன.

ரணிலின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு ஜே.வி.பியின் ஆதரவைப் பெற இணக்கம் தெரிவிக்கும் கமியூனிஸ்ட் கட்சிகளும் சமசமாஜக் கட்சியும் பொ.ஐ.முன்னணியும் ஜே.வி.பியும் ஒன்றாக இணைவதை எதிர்க்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. கொள்கையளவில் பொ.ஐ.முன்னணிக்கும் ஜே.வி.பிக்கும் இடையே பெரும் வேறுபாடுகள் இருப்பதால் இணைந்து செயற்படுவதை அவை விரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதுதவிர கூட்டணி குறித்து ஜே.வி.பியின் பிரசார செயலர் ரில்வின் சில்வாவும் சு.கட்சியின் அனுரா பண்டாரநாயக்கா, மங்கள சமரவீர ஆகியோர் அடிக்கடி ரகசியமாகப் பேச்சு நடத்துவதும் -

ஜனாதிபதியும் அவருக்கு நெருக்கமானவர்களும் இரகசியமாகக் கூட்டுக் குறித்து கலந்தாலோசனை நடத்துவதும் -

கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் சமசமாஜக் கட்சிகளுக்கும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனை அடுத்து ஏற்பட்டுள்ள இழுபறி நிலையாலேயே கூட்டணி குறித்து இறுதி முடிவு எடுப்பது பிற்போடப்பட்டுள்ளது.

இறுதி முடிவை எடுப்பதற்கான கூட்டம் விரைவில் நடத்தப்படுவதாக இருந்தது. எனினும் அது தற்போது காலவரையின்றிப் பிற்போடப்பட்டுள்ளது. (ம)


# வேலையாள்கள் தேவை

சசு இயந்திர இயக்குநர்கள், உதவியாளர்கள் உடன் தேவை.

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

இன்று பிற்பகல் 3மணிக்கு நேரில் வரவும்.

உதயன் பணிமனை,

361, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம். (C/26253)



# மாபெரும் கருத்தரங்கு

உயிரியல் ஆசிரியர் S.P.நாகநாதன்

கலந்துகொள்ளும் கருத்தரங்கு No. - II

A/L 2003 பரீட்சைக்கு எதிர்பார்க்கப்படும் வினாக்களை உள்ளடக்கியது.

ஆரம்பம் : இன்று (28.01.2003) 9 a.m.

**NEW SCIENCE CENTRE**

(4709)



# இயற்கை மூலிகை மருத்துவ முகாம்

இயற்கை மூலிகை சிகிச்சை மூலம் ஆஸ்துமா, உடல்பருமன், சலரோகம், மூலவியாதி, முகப்பரு, இளநரை, தலைமுடி உதிர்தல், மாதவிடாய் பிரச்சினைகள், தலையிடி, வாதம், நாரி உளைவு, கை கால் விறைப்பு, தோல் நோய்கள் மற்றும் தீராத இதர நோய்களிலிருந்தும் எந்தவித பக்கவிளைவுகளுமின்றி பரிபூரணமாகக் குணமாக சிகிச்சைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

ஆண்மைக்குறைவு, குழந்தைப் பேறின்மை போன்ற பிரச்சினைகளுக்கு தனிப்பட்ட முறையில் ஆலோசனைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-

Dr.R.K.நவனீதன் DYNS SMP NC

(இயற்கை மூலிகை மருத்துவ நிபுணர்)

யாழ். உல்லாசப் பயணியர் விடுதி,

வெலிங்டன் சந்தி

(முனீஸ்வரா கபே அருகில்), யாழ்ப்பாணம்.

இம்மாதம் யோகாசன வகுப்புகள் நடைபெறும்.

முகாம் நடைபெறும் நாள்கள் ஜனவரி 28,29,30,31 மற்றும் பெப்ரவரி 1,2,3 ஆம் திகதிகளில்

(13720)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.01.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.